
கலை/ இலக்கிய இதழ்

# காற்றுவெளி

பங்குனி / சித்திரை 2017



ஆசிரியர் - சோபா

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்
பங்குனி / சித்திரை 2017

ஆசிரியர்:
சோபா

கணினி:
கார்த்திகா. ம

வடிவமைப்பு:
தமிழ்நெஞ்சம் அமின்
tamilnenjam.amine@gmail.com


படைப்புக்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:

R.MAHENDARAN,
34,REDRIFFE ROAD,
PLAISTOW,
E13 0JX, UK

மின்னஞ்சல்:
mullaiamuthan16@gmail.com

நன்றி:
கூகுள்
முகநூல்

படைப்புகளின்
கருத்துக்களுக்கு ஆக்கதாரரே
பொறுப்பு

வணக்கம்!

மீண்டும் காற்றுவெளி புதிய படைப்புகளுடன் உங்கள் கரங்களில்.

இம்முறை நீண்ட இடைவெளிக்குப் பின் அச்சில் வருவது மகிழ்வைத் தருகிறது.

மீண்டும் கையைச் சுட்டுக்கொள்ளும் முயற்சி எனினும் தொடர்கிறோம்.

படைப்புக்கள் அனுப்புவோர்க்கும் ஆலோசனைகள் தருவோர்க்கும் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

புதிய நம்பிக்கையைத் தரும் படைப்பாளர்களை இலக்கிய உலகம் வியக்கும் வண்ணம் எழுதி வருவது மகிழ்வைத் தருகிறது.பலர் வீச்சுடன் எழுதுவதும்,கைகளுக்குள் கணினியுடனான பயிற்சியும் அதிகம் உள்ளவர்களாக இருப்பதும் எழுத்து இன்னும் வீச்சுடன் வரும் என்கிற எதிர்பார்ப்பைத் தருகிறது.

அதிகமாக நூல்கள் வெளிவரும்,திரும்பிப்பார்க்கும் வகையில் நாவல்கள்,சிறுகதைகள் வருவது எமது இலக்கியங்களின் வெளிப்பாடுகள் மேலும் வேர்களைத் தொடுமளவிற்கு வீச்சுடன் வரும் என்பது தெளிவு.

இவ்வாண்டு ஈழத்து நூல் கண்காட்சியை நடத்தும் திட்டம் உள்ளது.

நூல் அறிமுகத்திற்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

மீண்டும் அடுத்த இதழுடன் சந்திப்போம் என்கிற நம்பிக்கயுடன்..

நட்புடன்,

சோபா

# நஞ்சு...

பட்டுக்கோட்டை ராஜா



இவர்களின் தெருவில் திறக்கப்பட்டு வெற்றிகரமாய் வருமானம் பார்த்துக் கொண்டிருக்கும் `டாஸ்மாக்'கை மூடவேண்டும் என்கிற கோரிக்கையுடன் இளநகை, வாசு இருவருமாய் அதிகாலை நேரத்திலேயே ஆத்மநாதனைப் பார்க்க வந்துவிட்டார்கள். அவர் வீட்டைவிட்டு வெளியே கிளம்பிவிட்டால் பிறகு அவரைச் சந்திப்பது கடினம் என்று வாசு எச்சரிக்கை செய்திருந்தான்.

ஆத்மநாதன் சமூகஆர்வலர். அதனாலேயே திருமணத்தை மறுத்தவர். ஊரில் எங்கு தப்பு நடந்தாலும் தயங்காமல் தட்டிக் கேட்பவர். இவரைப் பார்த்தாலே அரசியல்வாதிகளின் வயிறு கலங்கும். சார்பதிவு அதிகாரியாய்ப் பதவிஉயர்வு பெற்று நல்ல வருமானத்தில் இருந்தவர், தன் அலுவலகத்தில் இருக்கும் ஊழல்பெருச்சாளிகளின் கொட்டம் காணத் தாங்காமல் வேலையை உதறிவிட்டு வெளியே வந்தவர். வந்ததும் முதல் வேலையாய்த் தன் அலுவலகத்தில் நடக்கும் தகிடுதத்தங்களை லஞ்சஒழிப்புத்துறைக்குப் புகார் எழுதிப் பலரையும் சிக்கவைத்துவிட்டார். இவற்றையெல்லாம் சொல்லித்தான் வாசு, இளநகையை இங்கே அழைத்து வந்திருந்தான்.

ஆத்மநாதனுக்கு வயது அறுபதைக் கடந்திருக்கும். எதிரே கிடந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தவர், ``வாங்க தம்பிகளா.. என்ன காலையிலேயே வந்திருக்கீங்க?"

``அய்யா என்பேரு வாசு,இவன் இளநகை.. சன்னதித்தெருவில்தாங்கய்யா எங்க வீடிருக்கு.. குடும்பங்கள் இருக்கிற தெருநடுவில் ஒருவாரத்துக்கு முன்னாடி அரசாங்க பார் ஒண்ணு திறந்திட்டாங்க... குடிச்சிட்டுப் போதையில் குடிமகன்கள் பண்ற அட்டகாசம் சகிக்க முடியலங்க.. அந்தக்கடையை எப்படியாவது மூடணும்!"

``இளைஞர்கள் இந்தக் கோரிக்கையோடு வந்திருக்கீங்க... அதுக்காக முதல்ல உங்களுக்கு என் பாராட்டு... என்ன படிச்சிருக்கீங்க?"

``ரெண்டுபேரும் சயின்ஸ்கிராஜூவேட்ஸ்... வேலை தேடிட்டிருக்கோம்."

``நல்லது... சன்னதித்தெருவில் நிச்சயம் கோவில் இருக்கும்... அங்கே பள்ளிக்கூடம் ஏதாவது இருக்கா?"

``பள்ளிக்கூடம் இல்லீங்கய்யா.. ஆனா டுயூஷன்சென்டர் ரெண்டு இருக்கு... அங்கேயும் நூற்றுக் கணக்கில் பிள்ளைகள் படிக்கிறாங்க...

அதுமாதிரி நாலஞ்சி நர்ஸிங்ஹோமும் இருக்கு!" என்றான் இளநகை.

``சரி தம்பிகளா, நான் ஒரு மனு எழுதித் தர்றேன்... அதுல நாலஞ்சி காப்பி எடுத்து தெருவாசிகள் எல்லார்கிட்டேயும் கையெழுத்துவாங்கி தாசில்தார்கலெக்டர் மந்திரி சி.எம் செல் எல்லாத்துக்கும் அனுப்புவோம்... இது முதல்படி.. அப்புறம் என்ன செய்யணும்னு நான் சொல்றேன்... இப்ப நான் அவசரமாப் போகணும்... பக்கத்து கிராமத்துல சுடுகாடு தனியே வேணும்னு தலித்துகள் போராட்டம்... நீங்க சாயுங்காலம் ஆறு மணிக்கு வந்து என்னைப் பாருங்க."

``சரிங்கய்யா, அப்ப நாங்க கிளம்பறோம்" இருவரும் கிளம்பினார்கள்.

∴ ∴ ∴

திருச்சிதிண்டுக்கல் சாலையில் புதிதாக நிறுவப்பட்டிருந்த கல்குவாரியில் பணிமுடிந்து ஊழிர்கள் புறப்பட்டார்கள். அதில் ஆர்த்தியும் ஒருத்தி.

பி.காம் பட்டாரியான அவளுக்கு இங்கே அலுவலகத்தில் கணக்காளராய்ப் பணி. ஆர்த்தி வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனாலும் தானே தன் காலில் நிற்கவேண்டும் என்ற கொள்கை உள்ளவள். அவளுக்கு இந்தப் பணி பிடித்திருந்தது. திருச்சியில் தன் தோழி பவித்ராவுடன் தனியாக வீடுபிடித்துத் தங்கியிருந்தாள். பவித்ரா ஒரு பெண்கள் கல்லூரியில் விரிவுரையாளர்.

குவாரியிலிருந்து பிரதான சாலைக்கு வரச் செம்மண் சாலையில் ஒரு கிலோமீட்டர் தூரம் நடக்கவேண்டும்.சாலையின் இருமருங்கிலும் கருவேல மரங்கள் ஒழுங்கின்றி மண்டிக் கிடக்கும். ஒருகாலத்தில் அங்கே விளைநிலம் இருந்ததற்குச் சாட்சியாய் காய்ந்துகிடந்த வாய்க்கால். அதை ஒட்டிய மதகுகள்.

இருட்டியபிறகு அந்தச் சாலையில் தனியே வரவேண்டாம் என்று பவித்ரா, ஆர்த்தியை எச்சரித்து வைத்திருந்தாள்.

மதகுக்கட்டையில் லுங்கியுடன் உட்கார்ந் திருக்கும் இளைஞர்கள் மூவர் ஆர்த்தியைப் பணிமுடிந்து திரும்புகையில் கிண்டல் செய்வது மூன்று நாட்களாய்த் தொடர்ந்தது.





வெளிவந்துவிட்டது!

இலக்கியப்பூக்கள் 2

ஈழத்து மறைந்த படைப்பாளர்கள் பற்றிய கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு..

பல அறிஞர்கள் எழுதியுள்ளனர்.

வெளியீடு:
காந்தளகம்
4, முதல் மாடி, இரகிசா கட்டடம்,
68, அண்ணா சாலை, சென்னை 600 002.
தொ.பே.: 0091 44 2841 4505
மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com
மின்னம்பலம்: www.tamilnool.com

வடக்கிலிருந்து பிழைப்புக்காக இங்கே வந்தவர்களின் கொழுப்பு. ஆர்த்தி அமைதி காத்தாள். கிண்டல் தொடர்ந்தால் அவர்களை விடக்கூடாது என்கிற எண்ணமும் உடன் வரும். கல்லூரியில் படிக்கையில் தற்காப்பக்காக கராத்தேயும் பயின்றிருந்தாள்.

அவர்கள் உழைப்பது, கிடைக்கிற கூலியில் போதையேற்றிக்கொண்டு ஜாலியாய் இருப்பது என்கிற ரகம். அவர்களுக்குப் பக்கத்தில் காலியான பீர்பாட்டில்கள் கிடப்பதை இவள் பார்த்திருக்கிறாள். இவள் அவர்களைக் கடக்கிறபோது இந்தியில் எதையாவது சொல்லிவிட்டுச் சிரிப்பார்கள். ஆர்த்திக்கு இந்தி அவ்வளவாகத் தெரியாது என்றாலும் அவர்கள் இவளை அசிங்கமாக வர்ணிக்கிறார்கள் என்பது புரிந்தது.

தான் கொண்டுவருகிற பேக்கில் தற்காப்புக்காக ஆப்பிள் வெட்டும் கத்தியையும் எடுத்து வருகிறாள். சந்தர்ப்பம் பார்த்து அதைப் பயன்படுத்தும் முடிவிலிருந்தாள்.

இன்றும் அவர்கள் உட்கார்ந்திருந்ததைக் கவனித்தாள். அவர்களைக் கடந்தபோது ஒருவன் பீர்பாட்டிலோடு இவளது உடலமைப்பை ஒப்பிட்டு என்னவோ சொல்ல, மற்ற இருவரும் சிரித்தார்கள்.

ஆர்த்தி நின்றாள். திரும்பி அவர்களை முறைத்தாள்.

அவர்கள் பயந்து எழுந்து நின்றார்கள். ஒருவன் மட்டும், ``ஸாரி சிஸ்டர்" என்றான்.

ஆர்த்தி, ``இந்தமாதிரி வம்பு பண்ணுனீங்கன்னா போலீஸ்ல கம்ப்ளெயிண்ட் பண்ணிடுவேன்!'' என்று எச்சரித்துவிட்டு நடந்தாள்.

இவள் திரும்பியதும் ஒருவன் அசிங்கமாய்ச் செய்கை செய்தான்.

∴ ∴ ∴

அன்றுமாலை சரியாக ஆறுமணிக்கு வாசுவும், இளநகையும் ஆத்மநாதனின் வீட்டுக்கு வந்தார்கள்.

``வாங்க தம்பிகளா... சொன்னபடி சரியா ஆறுமணிக்கு வந்திட்டீங்க.. உங்களோட நேரம்தவறாமை எனக்குப் பிடிச்சிருக்கு...மனு எழுதிட்டேன்"என்றவர் தன் ஃபைல்பேடில் இருந்த தாளை எடுத்துக் கொடுத்தார்.

வாசு வாங்கிக் கொண்டான். இளநகை, ``நன்றிங்கய்யா" என்றான்.

``நன்றி எதுக்கு தம்பி... இதைக் கொஞ்சம் முன்கூட்டியே சொல்லி இருந்தீங்கன்னா கடையையே திறக்கவிடாமல் செய்திருக்கலாம்!"

``கவுன்சிலர் நாகராஜன்தான் ரொம்ப ரகசியமா இந்தக் காரியத்தைச் செய்து முடிச்சிருக்காரு... முன்கூட்டி தெருவில் யாருக்குமே இந்தவிஷயம் தெரியாதுங்கய்யா!"

``அந்த நாகராஜனோடதுதான் இந்தக்கடை... பினாமி பேர்ல ஆரம்பிச்சிருக்கான்னு கேள்விப்பட்டேன்... நீங்க எதுக்கும் எச்சரிக்கையா இருக்கணும் தம்பி.. ஏன்னா நாகராஜன் கொலைக்கும் அஞ்சாதவன்...!"

``சரிங்கய்யா, நாங்க கிளம்புறோம்... மனுவை டைப் பண்ணி தெருவாசிகள்ட்ட கையெழுத்து வாங்கினபிறகு உங்கள்ட்ட காட்டிட்டு அனுப்பறோம்."

``சரி தம்பிகளா...பத்திரமாப் போய்ட்டு வாங்க."

வாசு ஏறிக் கொண்டதும் இளநகை மொபெட்டை செலுத்தினான். ``நல்ல மனுசன்டா... இவர்மாதிரி ஊருக்கு ஒருத்தர் இருந்தாலும் நாடு உருப்படும்!"

``ஆனா இந்தமாதிரி நல்ல ஜீவன்களை ஆண்டவன் ரொம்பநாட்கள் விட்டுவைக்கிறது கிடையாது!"

இவர்கள் பேசிக் கொண்டே வடக்குத்தெரு திரும்பியபோது எதிரில் ஒருகார் மோதுவது




அணு குண்டின் அதிர்வலையால்
அயல் நாடே அழிந்தாலும்--
ஆழ்கடலின் அலை எழுந்து--
ஊர் மனைகளை அழித்தாலும்-

உன் கன்னத்தின் குழி அழகை
படைத்த கடவுள் பார்த்திருந்தால்-
அழிவொன்று இல்லையடி..
அவன் படைத்த உயிர்களுக்கு !!

உரம் போட்டு பயிர் வழக்கும்
உழவர்களின் வயல்நிலங்கள் எல்லாம்
உன் உதட்டோரச் சிரிப்பதனை
ஒரு தரம் பார்த்துவிட்டால்-
வரம் கொடுக்கும் வானம் எதற்கு-?
வளம் கொடுக்கும் நிலம் எதற்கு ?

புன்னகை தவழும் உன் பூ முகத்தால்
மதிப்பிழந்து விட்டதடி பொன் நகையும்
விண்ணில் உலாவும் வெண்ணிலாவும் !

அடி பெண்ணே !
உன்னைப் பார்த்ததினால் --
ஊற்றெடுத்தது இவ்வரிகள் !
உன்னோடு இணைந்து கொண்டால்
வாழ்க்கை எல்லாம் வெற்றிப்படிகள்--!!

## வேலணையூர் லிங்கா

போல வந்து பிரேக் அடித்து நின்றது.

``எவன்டா மடத்தனமா கார் ஓட்றது." என்று வாசு உச்சத்தொனியில் கத்தியவன் காரிலிருந்து இறங்குபவரைப் பார்த்துவிட்டு நிறுத்தினான்.

நாகராஜன் பந்தாவாய் இறங்கிவந்தார்

``என்னா,தம்பிகளா.. படிச்சிருக்கீங்க... வேலை கிடைக்கலைன்னா சொல்லுங்க, நம்ம பார்லயே ஒரு வேலை போட்டுத் தர்றேன்... ஏன் வேண்டாத வேலையெல்லாம் செய்றீங்க?"என்று கேட்டுக்கொண்டே வாசுவின் சட்டைப்பைக்குள் கைவிட்டு ஆத்மநாதன் எழுதிக்கொடுத்த மனுவை எடுத்துக் கிழித்து வீசினார்!

``குடும்பங்கள் வாழும் தெரு நடுவுல ஒயின்ஷாப் நடத்துறீங்களே, அது நியாயமா?" என்று கோபமாய்ப் பேசிய இளநகையை வாசு தடுத்தான்.

``வாசு, தம்பிக்கு இளரத்தம் பொங்குது.. கொஞ்சம் அடக்கி வாசிக்கச் சொல்லு!"

வாசு மொபெட்டை ஓரமாகத் தள்ளி நிறுத்தியதும் கார் புறப்பட்டது.

∴ ∴ ∴

அடுத்தநாள் மாலை.

சம்பளநாள் என்பதால் ஆர்த்தி பணிமுடிந்து கிளம்பியபோது நன்றாகவே இருட்டிவிட்டது. இனம்புரியாத பயம் மனசைக் கவ்விக் கொண்டது.

மதகுகளில் நல்லவேளையாய் அந்த இளைஞர்களைக் காணவில்லை.

தைரியமாய் நடந்தபோது பின்னாலிருந்து ஒருவன் தோன்றினான். ஆர்த்தி கவனிக்கவில்லை.

பின்னால் வந்தவன் சட்டென்று ஆர்த்தியின் இரண்டு கைகளையும் பற்றியிழுத்துப் பின்னால் வைத்து முறுக்கினான்.

ஆர்த்தி வலி தாங்காமல்,``அம்மாஆஆ!" என்று அலறினாள்.

தொடர்ந்து அவள் கத்தாமல் முன்னால் தோன்றிய இன்னொருவன் அவள் முகத்தில் கைக்குட்டையை வைத்து அழுத்தினான். அதில்

தெளிக்கப் பட்டிருந்த மயக்கமருந்து ஆர்த்தியைச் சில நொடிகளிலேயே மயக்கப்படுத்தி விட்டது.

எதிர்க்கும் சக்தியிழந்த ஆர்த்தியை நிறை போதையிலிருந்த மூவருமாய் இருண்டிருந்த கருவேலங்காட்டுக்குள் தூக்கிச் சென்றார்கள்.

⁂ ⁂ ⁂

இரவுமணி பத்து மேலிருக்கும்.

நாகராஜன் வீட்டுத் தொலைபேசி மணி ஒலித்தது.

தொலைக்காட்சி ஸீரியலில் ஆழ்ந்திருந்த நாகராஜின் மனைவி கண்ணம்மா, `இந்தநேரத்துல யாராயிருக்கும்?' என்ற யோசனையுடன் ரிஸீவரை காதில் பொருத்தி, ``ஹல்லோ, யாருங்க... அவரு இன்னும் கடையிலிருந்து வரலை!"என்றாள்.

``அம்மா, நான் பவித்ரா பேசுறேம்மா."

``பவித்ராவா, யாரும்மா நீ?"

``அம்மா, அது டாஸ்மாக் ஓனர் நாகராஜன் வீடுதானே?"

``ஆமாம்."

``அம்மா, நான் ஆர்த்தியோட ரூம்ல தங்கியிருக்கிற பவித்ரா பேசுறேம்மா."

``இப்பதான் புரியுது.. சொல்லும்மா... ஆர்த்தி நல்லாயிருக்காளா?"

``அவளைப் பற்றிச் சொல்லத்தாம்மா கூப்பிட்டேன். காலையில் வேலைக்குப் ஆர்த்தி இன்னும் அறைக்குத் திரும்பலை. அவளோட மொபைலும் ஆஃப் ஆகியிருக்கு.. குவாரிக்கு ஃபோன் பண்ணினேன்.அங்கிருந்து கிளம்பிட்டதாச் சொல்றாங்க.. எனக்குப் பயமா இருக்கும்மா..."



# காத்திருப்பு

எப்போதும் வரக்கூடும்
காற்றின் வருடல் கொணர்ந்த உணர்வு போல்
பேரிச்சலை உருவாக்கும் சொற்கள்
பட்டாம்பூச்சி அமரும்
ஈரமான சருகுகளில்
பத்துரூபாய் நாணய நிலவினில்
இயேசுக்களை சுமக்கும் சிலுவையில்
தங்கிவிட்டு நகர்கிறேன்
கோர்க்கப்பட வேண்டிய வார்த்தைகளை
நூதனமாய் களவாடிய பிறகு.
எழுதுகோல் பற்றுகையில்
யுவதிகளின் மேனி இடையூறு செய்கையில்
மூளைசலவை செய்துவிட்டு தெளிகிறது புலன்.
ஈக்களின் இரைச்சலில்
காழ்புணர்ச்சி ஏற்பட்டு
அகம் எது
புறம் எது
என தெரியாமல் போனாலும்
உதிரியாய் சேர்த்த வார்த்தைகள்
என்றேனும் உதவுமென
சேகரம் செய்கிறேன்
மதுபானத்தில்
உறங்கி கொண்டிருக்கிற குமிழியை போல்
என் மௌனத்தில் ஒளிந்திருக்கிறது
வெக்கைய எச்சமிடும் நளினமான சொற்கள்
நீண்ட பெருவெளியில்
எதை எதையோ யோசித்தப்படி இமைக்காமல்
காத்திருக்கிறேன்
எப்போதும் வரக்கூடும்
கவிதைக்கான முதல்வரி

- மனோபாரதி

# அடுதலும் தொலைதலும் இவ்வுலகத்து இயற்கை

முன்னுரை

உலகில் மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை போர் நிகழாத காலமே இல்லை. வரலாற்று ஆய்வாளர்களும், அறிஞர்களும் போர் புரிதல் மனித இனத்தின் இயற்கைப் பண்பென்றும், போர் என்பது மனித இனத்தின் ஒரு வாழ்வியல் கூறாக அமைந்துள்ளதாகவும் கூறுவர். அவ்வாறு போர் உருவாகக் காரணம், மனிதன் உள்ளத்தில் உள்ள இருவகை இயற்கைப் பண்புகளே ஆகும். அவை தன்னைப் பாதுகாத்தல், தன் அதிகாரத்தை விரிவுபடுத்துதல் என்பனவாகும். இவ்விரண்டின் அடிப்படையிலோ அல்லது ஏதாவது ஒன்றின் அடிப்படையிலேயே பெரும்பான்மையான போர்கள்; உலகில் உருவாகி நிகழ்ந்துள்ளன. எனவேதான்,

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை" (புறம்.76)

என்பர் இடைக்குன்றூர்க்கிழார். இதனடிப்படையில் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற போர்க்காரணங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## போர்க் காரணங்கள் பற்றிய அறிஞர்களின் கருத்து

வெளிநாட்டு அறிஞரான 'நீட்சேயின்' கருத்துப்படி ஆதிக்கம் செலுத்தும் விருப்பம், பெர்க்சானின் கருத்துப்படி 'வாழ்க்கையின் முதன்மை ஆர்வங்கள்' போன்றனவும் போருக்குரிய காரணமென்பர். "கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த எம்பொடோகிளிசு என்ற கிரேக்கச் சிந்தனையாளர் கூறுவது போல், அண்டம் முழுவதும் காணப்படுகின்ற அன்பும், வெறுப்பும், கவர்ச்சியும் தான் சமூகத்தின் மூலக்கூறுகள். இவை யாவற்றிற்கும் தந்தை போர்தான், அவையே எல்லாவற்றுக்கும் அரசன், போராட்டத்தின் மூலம் தான் எல்லாப் பெருட்களும் உயிர்த்தன்மை அடைகின்றன."

*(க.ப. அறவாணன். அற்றை நாட் காதலும் வீரமும். ப.எ- 215)*

"இவர்களுக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் வாழ்ந்த ஹெராக்கிலிடசு (Heraclitus), டார்வின் (Darwin), ஸ்பென்சர் (Spenzer) ஆகிய கொள்கையாளர்களால் வாழ்க்கைப் போராட்டத்தில் நிலைத்து நிற்றல் (Survival of the fitest) என்ற கருத்துப் பரப்பப்பட்டது. பிறகு அக்கருத்தையே நீட்சே (Nietzshe) ஏ.ஜி.கெல்லர் (A.G.Keller) போன்றோர் வலியறுத்தினர். இவர்கள் 'பூசல்' சமூகத்திற்குத் தேவையான ஒன்று எனக் கூறினர். அத்துடன் பூசலும் போரும் சமூக முன்னேற்றத்திற்கு உதவுவன என்றும், தாழ்ந்த திறமையற்ற மனிதர்கள் ஒதுக்கப்பட்டுத் திறமையான உயர்ந்தவர்களைத் தக்கவைக்கும் ஓர் இயல்பான செயல்முறையாக அதனை எண்ணினர்." *(பாககல், கிசுபர்ட், சமூக இயலின் அடிப்படைக் கோட்பாடுகள் ப.எ - 64)* இவற்றை நோக்கினால் அன்றைய அறிஞர்கள் போரை எந்தளவு வற்புறுத்தினர் என்பது தெளிவாகும். தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் போர் என்றவுடன் விரும்பி ஆர்ப்பரிக்கும் சிவந்த கண்ணினராக பழந்தமிழர்களை குறிப்பிடுகின்றன. "செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர்" *(அகம் - 157)* என்னும் அகநானூற்றுப் பாடல் வரி ஊரிலுள்ள பொது மன்றத்தில் தொங்கும் முழவு காற்றுப்பட்டு ஒலி எழுப்ப அதனைப் போர்ப்பறை ஒலியென கேட்டு வீரர்கள் மகிழ்ந்ததாக சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இதுபோன்று "வேந்தர்களுக்குள் ஏற்படும் பெரும்போர்களின் காரணங்களை ஆறு நிலைகளாக வகுத்துக் கூறுவர் ஞா.தேவநேயப்பாவனார். அவைகளாவன,

1. ஆசை : மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை, விண்ணாசை
2. பாதுகாப்பு : தற்காப்பு, நாட்டுக்காப்பு, மதக்காப்பு
3. பகை : பழிதீர்ப்பு, பழம்பகை, பொறாமை
4. தண்டனை : இகழ்ச்சி, துறையிறாமை, படையெடுப்பு
5. மறம் : கடுமறம்
6. அருள் : தன்குடி, பிறர்குடி ஆகியனவாகும். (பழந்தமிழராய்ச்சி - ப.எ 101)

மேலும், போர்புரிதலுக்குக் காரணமான 7 வகைப் பண்புகளென எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். *(தமிழிலக்கியச் சரித்திரத்தில் காவிய காலம். ப.எ.71-72)*, அவைகளாவன,

1. புகழ்ச்சி, விருப்பம்
2. தாமே தனித்து நின்று போர்புரியும் தனிச்சேவகம்
3. தம் முந்தையோர் வீரத்தில் வியந்து தம் உயர்குடிகுறித்த பெருமிதம்
4. மன்னரும் படைத்தலைவரும் படைஞர்களை ஊக்கப்படுத்துதல்
5. நாட்டுக்காக மட்டுமின்றி மன்னர் குடிக்காகப் போரிடுதல்
6. காதல் மற்றும் பழிவாங்குதல் உணர்ச்சியால் போரிடுதல்
7. வீரத்தை புலப்படுத்தும் தினவு ஆகிய காரணங்களுக்காகப் போரிடுதல் ஆகியனவாகும்.

மேலும், சங்க இலக்கியத்தில் போருக்குரிய முதன்மைக் காரணங்களாக இவற்றையும் வரிசைப்படுத்தலாம். அவைகளாவன,

1. வீரவிருப்பம் / மறப்பணி
2. போர் விருப்பம்
3. பகைமை / மண்ணாசை
4. பெருமை / புகழ்ச்சி
5. போறாமை
6. தலைமை விருப்பம்
7. உரிமைப்போராட்டம்
8. மகளிரை மணத்தல் / மகள்மறுத்தல் ஆகியனவாகும்.

## 1. வீரவிருப்பம் / மறப்பணி

தம் வீரவுணர்வை உலகினருக்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற உயரிய விருப்பம் போருக்குரிய முதன்மைக் காரணமாகும். போர்க்களம் என்பது தனிமனித விழைவிற்கு ஏற்ற இடமாக முதலில் அமைகிறது. வீரயுகக்காலத்து மனிதர்களெல்லாம் இத்தகையோரே ஆவர். பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை நூலாசிரியரால் காட்டப்படும் 'தன்னுறுதொழில்' என்பது வீரவிருப்பத்தினால் உண்டாகும் விளைவேயாகும். தன் வீரத்தையும் ஆண்மையையும் நிலை நாட்டிக் காட்ட வேண்டும் என விரும்பிய போர் வீரர்களின் முதன்மைச்செயலே வீரவிருப்பம் என்பதாகக் கூறலாம். எனவேதான், தன் மறப்பணியைக் காட்டுவதற்காக விருப்பத்தோடு போர் நிகழ்தல் உண்டு.

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பற் றென்ப." (தொல்.பொருள்.புறத்.நூ.70)

எனும் மேற்கண்ட தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவும் இதனைச் சுட்டுகிறது. தான் வலிய போருக்குப் போகாது இருக்க, பகைவர் தாமே வலிந்து போருக்கு அழைக்கும் போது கூதிர் வேனிற் காலமானாலும் விருப்பத்தோடு வேந்தர்களும் படைஞர்களும் போராற்றுதல் உண்டு. இதனை,

"பெரும்பகை தாங்கு வேலி னானு
மரும்பகை தாங்கு மாற்ற லானும்." (தொல்.பொருள்.புறத்.நூ.76)

என்னும் தொல்காப்பிய நூற்பா பழந்தமிழ் வீரர்களின் வீரவிருப்பத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

## 2. போர் விருப்பம்

பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் வீரச்செயல்களே முதன்மை பெற்றிருந்தன. "கிரேக்க வீரன் அசில்லிசு (asilisu) என்பவன் தன் முன்னோர்கள் பலரைக் கொன்று வீழ்த்துவதில் ஆற்றல் மிகுந்தவனாக இருந்தான்

என்றும், போரில் பிறரைக் கொன்று வெல்வது அவன் குடும்பத்தொழில் என்றும் பெருமை பேசியதாக க.கைலாசபதி கூறுகிறார்." ( Tamil Heroic Poetry - 249)

பண்டைத் தமிழர்கள் "வெஞ்சினம் கூறுவதாய் அமையும் புறத்திணைத் துறைகளும், புறநானூற்றுப் பாடல்களும் போர் விருப்பங்களை மிகுதியாகப் புலப்படுத்துகின்றன என்பார்." (க.ப.அறவாணன் - அற்றைநாட் காதலும் வீரமும் ப.எ. 217)

சங்க இலக்கியப் புறநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் போர் புரிந்து உயிர் துறத்தலேயே உயர்வு எனக் கருதியதாக கூறுகிறது. இவற்றால் போர் விருப்பமும் போருக்குரிய காரணங்களாக அமைவதை அறிய முடிகிறது. மேலும், "மக்களை யார் மிகுதியாகக் கொன்று குவிக்கிறார்களோ அவர்களுக்கு மிக உயர்வான பரிசுகள் கிடைக்கின்றன எனப் போரைப் பற்றி லியோ டால்ஸ்டாய் கூறியக் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது." (போரும் அமைதியும் பாகம் 2 ப.எ.748 )

"போர் நெறியெல்லாம் கொலை வெறியேயாம் என்று கூறுதல் சங்ககாலத் தமிழர் பண்பாட்டிற்கு சற்றும் ஒவ்வாததாகும் என்பர்." (மா.ரா.போ.குருசாமி சங்ககாலம் - ப.எ.67)

"போர் என்பது தற்காப்புக்காகவும் முறை தவறி நாடு பிடிக்கும் விருப்பத்திலும், வலிமையை நிலைநாட்டும் நோக்கத்திலும் வரும் வேந்தர்களை அடக்கிச் செந்நெறிப்படுத்துதற்காகவும் போர் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றென தொல்காப்பியர் தன் காலத்திலேயே தெளிவுற வரையறுத்துள்ளார். இன்று கூறப்படும் கொள்கையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சங்ககாலத் தமிழ் நாட்டுப் பெரியோர் கூறியுள்ளனர் என்பது அறிந்து மகிழத்தக்கது என்பர்." (சி.இலக்குவனார் - இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்.ப.எ.135-136)

## உதைக்கும் நீதி

காந்தியின்
கைத்தடி உடைத்து
துப்பாக்கியாக்கி,
திலீபனின்
கண்கள் பிடுங்கி
கந்தகம் செய்து,
ஆழக் கடலெங்கும்
ஆட்சி செய்த சோழனை
பிணமாய்க் கரையொதுக்கி,
காருண்யம் பேசி
காவிக்குள் மறைந்திருக்கும்
கூர் வாளுக்கு
உலகம் வழங்கும் சிறப்பு பரிசு
கால அவகாசம்.

கனகசபாபதி செல்வநேசன்

3. பகைமை / மண்ணாசை

ஆசைக்கு அலைபவர்களே மனிதர்கள். வாழ்க்கைக்கு இது நிலையற்றது, இது நிலையுள்ளது என்பதெல்லாம் அறிவுக்குமுன் அழுத்தமான கேள்வியாக மனிதர்கள் முன் நிற்பதில்லை. எதையும் அடைய அதிகார பலமும், ஆயதங்கள் ஏந்திய படை பலமும் இன்றியமையாததாகக்

கருதப்படுகின்றன. மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும், சிற்றூர்த் தலைவர்களும் பகைவர்களிடமிருந்து தாம் ஆளும் பகுதியைக் காத்துக்கொள்ளவும், தன்னரசை மேலும் விரிவுபடுத்தவும் எக்கணமும் விரும்பிப்போர்புரியும் திடமான மனமுடையவர்களாக வாழ்ந்துள்ளனர். இதுபோன்ற நிலைகளெல்லாம் வேந்தர்களுக்குள் பகைமையை உருவாக்கியிருக்கிறது. இதற்காக தமிழ் மன்னர்களும் மக்களும் நாளோயாது போரிட்டுக் கொண்டே இருந்தனர். எனவேதான்,

"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" (தொல்.பொருள்.புறத்.62)

என்னும் மேற்கண்ட தொல்காப்பியப் பொருளதிகாரம் நூற்பா அக்கால தமிழ்ச்சமூகத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளது. இவ்வுலகம் அனைத்து அரசர்களுக்கும் பொது என்னும் நிலையை ஏற்றுக்கொள்ளாது தன்நாடு, தன் இடம் சிறிது என்னும் மனவுணர்ச்சி உந்துதலால் அதனை விரிவுபடுத்த போர்புரியும் மனப்போக்கையே வேந்தர்கள் மனதில் வேரூன்றச் செய்துள்ளது. சேரமான் கடுங்கோ வாழியாதன் என்னும் மன்னன் தன்னரசை விரிவுபடுத்த மண்ணாசையால் பிற அரசர்களோடு போரிட்டான் என்னும் செய்தியினை புறநானூற்று 8 வது பாடல் பதிவு செய்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. மேலும், பகைமையும் போருக்குக் காரணம் என்பதை 'வேற்றுப்புலம்', 'உறுபகை வேந்து', 'உல்கு வேந்து' என்னும் சொல்லாட்சிகள் தொல்காப்பியப் புறத்திணையியலில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

"கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமு
முள்ளியது முடிக்கும் வேந்தனது,
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே." (தொல்.பொருள்.புறத்.67)

என்னும் மேற்கண்ட தொல்காப்பிய நூற்பா உணர்த்தும் பொருண்மையாவது பொருள் வேண்டி நின்றவர்களுக்கு வேந்தன் தன் பகைவர் நாட்டினைத் தான் வெற்றி கொள்ளுமுன்பே வேண்டியவர்களுக்கு கொடையளித்து சிறப்பித்துள்ளான். இதன் உள்ளார்ந்த செய்தியாவது தன்னை இகழ்ந்தோரையும் தான் இகழ்ந்தோரையும் உறுதியாக வென்று வீழ்த்துவேன் என்பதாகும். எனவே, பகைமை உணர்வு போருக்கு முக்கியக்காரணமாகும்.

### 4. பெருமை / புகழ்ச்சி

பெருமை அல்லது புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள் இவ்வையகத்தில் வாழ்வது மிக அரிதாகும். இக்கருத்தினை உறுதிப்படுத்தும் விதமாக,

"வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் றாங்கிய பெருமை யானும்." (தொல்.பொருள்.புறத்.நூ.63)

என்னும் மேற்கண்ட தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பா, தன்னை

எதிர்த்து வருகின்ற பகைவர்களை கற்சிலை போல நின்று வீழ்த்திய பெருமையை அனைவருக்கும் உணர்த்த வேண்டுமென்று கூறுவதாக அமைந்திருக்கின்றது எனலாம். எனவே, புகழ்ச்சிக்காகவும் போரிடுதலும் பண்டைத் தமிழர் மரபாக இருந்திருக்கிறது என அறியமுடிகின்றது.

5. பொறாமை

பாரி வள்ளலின் புகழ் வானளவு பரந்து விரிந்து காணப்பட்டதைக் காணவோ கேட்கவோ மனமுவந்து ஏற்றுக்கொள்ளவோ விரும்பாத மூவேந்தர்கள் தன் படைகளோடு பாரியின் மகளை மணமுடித்து பறம்புமலையை கைப்பற்றும் எண்ணத்தோடு முற்றுகையிட்டனர். இப்போருக்கான காரணமாக மகள்மறுத்தலென சங்ககால வரலாறுகள் எடுத்துரைத்தாலும் மறைமுகமாக பொறாமையால் விரிந்த போர்-நிகழ்வு என்றே சுட்டிக்காட்டுகிறது. புராணங்களிலும் இதிகாசங்களிலும் கூட இதுபோன்ற போர் நிகழ்வுகளைக் காணமுடிகிறது. பாண்டவர்கள் தம் செல்வாக்கினையும் சொல்வாக்கினையும் மக்கள் மனமுவந்து மதிப்பது கண்டு கௌரவர்கள் தம் கண்களால் ஏற்றுக்கொள்ள இயலாது அவ்வாழ்க்கையும் மரியாதையையும் கெடுக்கவேண்டுமென்றோ, தங்களுக்கே அச்செல்வாக்கு கிடைக்குவேண்டுமென்ற பொறாமையால் போர் தொடுத்தனர் என்ற வரலாறு பாரதப்போராக பல ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் பொறாமையும் போருக்குரிய முக்கியமான காரணங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

6. தலைமை விருப்பம்

அஃறிணை நிலையிலிருந்து தன்னை உயர்திணையாக அடையாளம் கண்ட நாளிலிருந்து தன் சொல்லுக்கும் செயலுக்கும் இவ்வுலகமும் தலைவணங்க வேண்டுமென்ற தலைமை விருப்பம் உடையவர்களாகவே பெரும்பான்மையான மனிதர்கள் அறியப்படுகின்றனர். வீரயுகக்காலத்திற்கு முன்பிருந்தே இந்நிலை தமிழ் மண்ணில் வேரூன்றிக் காணப்பட்டுள்ளது. எனவேதான், மன்னர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் போட்டியும் பொறாமையும் தலைமை விருப்பமாக மேலோங்கும் பொழுது தங்களில் எவர் வலிமையில் மேம்பட்டவன் என வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகளை எதிர்பார்த்தும், உருவாக்கியும் வாழ்ந்துள்ளனர். எனவே, தலைமை விருப்பம் என்னும் எண்ணம் பல பெரும்போர்களுக்கு அடித்தளமிட்டுள்ளது என்பதனை அறியமுடிகிறது. இதனை,

"போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல்.பொருள்.புறத். நூ - 4)

என்னும் மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவும் பதிவுசெய்துள்ளதை அறியமுடிகிறது.

7. உரிமைப் போராட்டம்

இயற்கைக்கும் மனிதர்களுக்கும் நிகழ்ந்த போர்களை விடுத்து மற்றவை அனைத்தும் இவ்வுலக வரலாற்றில்; தடம்பதித்த உரிமைப்போராட்ட நிழகழ்வுகள் எனலாம். இந்நிலை மண்ணில் மனிதர்கள் காலூன்றி செம்மைப்படுத்திய காலம் முதல் நீடித்துக் கொண்டிருக்கிறது. உரிமைப்போராட்டம் என்பது இருநாட்டிற்கிடையில் மட்டுமல்ல, ஒரே இரத்தப் பந்தத்தில் பிறந்த ஒரு குடும்பத்திற்கிடையேயும் நிகழலாம். அரசுக் கட்டில் உரிமைக்காக தாயாதியரிடையே போர்கள் நிகழ்ந்தமையை உலகவரலாறுகள் பல எடுத்துரைக்கின்றன. எடுத்துக் காட்டாக, கரிகாலனுக்கு உரிய அரசுரிமையை மாற்றார் கைப்பற்ற முன்வரும் போது அதனை மீட்பதற்காகக் கரிகாலன் நடத்திய போர் நிகழ்வுகளை பட்டினப்பாலையும், பொருநராற்றுப்படையும் நமக்கு எடுத்தியம்புகின்றன. அரசுரிமை காரணமாக ஒரே குலத்தைச் சேர்ந்த சோழன் நலங்கிள்ளிக்கும் சோழன் நெடுங்கிள்ளிக்கும் போர் மூண்டதனை சங்க இலக்கியமும் குறிப்பிடுகின்றன. (புறநானூறு 45) அரசகுலத்தில் வழிவழியாகத் தொடரும் அரசுரிமை அதிகாரத்தை தந்தைப் புதல்வர்களுக்கு வாரிசுரிமை காரணமாக வழங்குவதற்குள் தாமாக முன்வந்து தந்தையோடு போரிடுதலும், பிறப்பால் மூத்தோரை வென்று இளையோலீர் ஆட்சிப்பொறுப்பேற்க முயற்சிப்பதும் உண்டு. எனவே, உரிமைப் போராட்டமும் போருக்குரிய முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.

### 8. மகள்மறுத்தல்

விரும்புதல் அல்லது ஆசைப்படுதல் என்பது யாவருக்கும் பொது, ஆனால் விருப்பத்தை வெளிப்படுத்துவதும் ஆசைக்கு இணங்கியதை அடைய முயற்சிப்பதிலும்தான் வீரமும் கலாச்சாரமும் பண்பாடும் முன்னின்று ஒருவனை நல்லவனாகவும் தீயவனாகவும் வழிநடத்தி அவனை இவ்வுலகத்திற்கு அடையாளப்படுத்துகின்றன. .இதுபோன்று, தான் ஆசை கொண்டவளை அடைவதற்கு விருப்;பம் இல்லாத பெண் வீட்டாரை எதிர்த்து பெரும்படையோடு போரிட்டு வென்றாவது மனமுடிக்க வேண்டுமென்று பழந்தமிழ் மூவேந்தர்கள் முயன்றுள்ளனர் இச்செயல்களை ஆழ்ந்து நோக்கினால் பெண்வீட்டாரின் செல்வ வளங்களின் மீது கொண்ட பேராசையாகவும் இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. எனவேதான், தொல்காப்பியப் புறத்திணையியல் மகள்மறுத்தல் தொடர்பாக எழுந்த போர்களையும் பதிவு செய்துள்ளது.

"நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பால்." (தொல்.பொருள்.இளம். நூ.77)

என்னும் தொல்காப்பிய நூற்பாவும், புறப்பொருள் வெண்பாமாலை மகட்பாற்காஞ்சித் துறையும் மகள்மறுத்தல் போரினை எடுத்துரைக்கிறது. புறநானூற்றில் **54, 336, 356** ஆகிய பாடல்களும் **109, 110, 111** ஆகிய மகட்பாற்காஞ்சித் துறையில் மகள் மறுத்தல் பற்றிப் பேசுவதாக அமைந்திருக்கின்றன. வேந்தர்கள் பெண் வேண்டி நின்றமைக்குத் தலைவியின் அழகு காரணமாய் அமைந்திருக்கலாம் என புறநானூற்று 338

வது பாடல் கூறுகிறது. "வேந்தன் குறையுற்று நின்ற செய்தியை அடுத்துத் தொடர்பின்றியும், தலைவியின் அழகு இணைத்துப் பேசப்படுதற்கு வேந்தன் தலைவியின் அழகில் நெஞ்சம் பறி கொடுத்தமை காரணமாகலாம் என ஆ.இராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்". (அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு.ப.எ.84)

## முடிவுரை

சங்கஇலக்கியப் போர்க்காரணங்களை ஆராய்ந்தறியும் பொழுது வேந்தர்களுக்கிடையேயும் மாந்தர்களுக்கிடையேயும் போர் தோன்றுவது இவ்வுலகத்து இயற்கை என்பது தெளிவாகிறது. போர் எழுவதற்கான காரணங்களை காலத்தால் முந்திய தமிழிலக்கண நூலான தொல்காப்பியமும் பட்டியல் இடவில்லை. தொல்காப்பிய உரைகளும் வரையறுக்கவில்லை. ஆனால், தொல்காப்பிய மூலமும் உரைகளும் ஆங்காங்கே புறத்திணையியலில் மட்டும் போருக்கான காரணங்களை மேலோட்டமாகச் சுட்டிக்காட்டுகின்றன. மகள் மறுத்தல் போன்ற போர்க்காரணங்களின் உண்மைச்செய்தியினை பண்பாட்டு நோக்கில் எதிர்கால தமிழ் மரபின் முக்கியத்துவம் கருதி புலவர்கள் பலர் ஒட்டு மொத்தமாக தங்கள் கருத்தாக்கங்களை தவிர்த்திருக்கலாம் எனவும் கூறலாம்.

மு.செல்லமுத்து

தமிழியற்புலம்
முனைவர்ப்பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பார்வை நூல்கள்:

1. 1. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு (சங்க இலக்கியம்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை 600 098. முதற்பதிப்பு - 2004.
2. தொல்காப்பியம் - உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், கணேசையர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 2007, சென்னை 600 113.
3. க.ப. அறவாணன் - அற்றை நாட் காதலும் வீரமும், பாரி நிலையம், முதற்பதிப்பு 1971
4. பெ.மாதையன் - சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பதிப்பகம் வெளியீடு, சென்னை 600 014, நான்காம் பதிப்பு 2012.
5. லியோ டால்ஸ்டாய் - போரும் அமைதியும், சீதை பதிப்பகம், முதற்பதிப்பு 2007, சென்னை- 05.
6. சி.இலக்குவனார் - இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்.
7. ஆ.இராமகிருஷ்ணன் - அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு



# மரத்துடன் மனங்கள்

கே.எஸ்.சுதாகர்

இரவின் பனியில் நனைந்த 'அக்பர்' பாலத்தின்மீது, நான்கு பெண்கள் நடுங்கிய படி பொறியியல்பீடம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

மகாவலி நதிக்குக் குறுக்காக இரண்டு தூண்களின் உதவியுடன் கம்பீரமாக நிற்கும் அந்தப் பாலம் இடிந்து விழக்கூடும் என்ற நடுக்கம் அல்ல அது. எதிராக வந்து கொண்டிருக்கும் ஐந்து ராக்கிங் பூதங்களைக் கண்டுவிட்ட பயப்பீதி அது.

"பெயர்களை ஒவ்வொருத்தராகச் சொல்லுங்கள்!"

"பரமேஸ்வரி, கௌசி, பல்லவி, தாரிணி"

இந்த விளையாட்டு கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வருகின்றது.

"பல்லவி மாத்திரம் இதிலை நிக்கலாம். மற்ற மூண்டு பேரும் எங்களோடை வாருங்கள்" சொல்லிவிட்டு அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்த பூதங்களில் நான்கு போயின.

கருணா மாத்திரம் பல்லவியுடன் நின்றான். சந்தித்த முதல்நாளே கருணாவின் கண் அவள் மீது பட்டுவிட்டது.

ஹந்தான மலைச்சாரலில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளிக்கற்றைகள் பல்லவியின் மீது படர முகம் ஜோராக ஜொலித்தது. சினிமாப்படங்களில் வருவது போல தென்றல் அவள் கேசங்களைச் சிலிர்க்க வைத்தது. பல்லவி குள்ள உருவம் என்றாலும் அழகுராணிதான். இரட்டைப்பின்னலை முன்னாலே தூக்கி வாகாக வீசியிருப்பாள். அதில் கருணாவின் மனம் ஏறி இருந்து ஊஞ்சல் ஆடும்.

"என்னைத் திருமணம் செய்வாயா?" நிஜத்தைப் பகிடியாகத் திரித்து கேள்வியாக்கித் தூது விட்டான் கருணா.

"நான் என்ரை அப்பா அம்மா சொல்லுறபடிதான் கேட்பேன்" ஒவ்வொரு தடவையும் இப்படிச் சொல்லி சிரித்து மழுப்பி விடுவாள் அவள்.

"அப்ப உன்னுடைய பெற்றோர் என்னைத் திருமணம் செய்யச் சொன்னால் செய்வாயா?" இந்தத் தடவை ஒரு தீர்க்கமாகவே வந்திருந்தான் கருணா.

அவள் நிலத்தைக் கீறி பாலத்தை நோக வைத்தாள். இவன் மகாவலியைப் பார்த்து மகா வலியில் துடித்து நின்றான்.

"சரிஞ் நீ யாரையாவது எப்பவாவது விரும்புவதாக இருந்தால், என்னிடம் தான் முதலில் சொல்ல வேண்டும்" அப்படியொரு திட்டத்தைப் போட்டுவிட்டு, அவளின் பெற்றோர்களைச் சந்திக்கலாம் என்பது கருணாவின் எண்ணம்.

"சரி என்றால் இந்த இடத்தைவிட்டுப் போகலாம். இல்லாட்டி பின்னேரம் உன்ரை கூட்டாளிகள் வரும்வரைக்கும் நானும் நீயும் இதிலைதான்."

பல்லவிக்கு தற்காலிகமாகத் தப்பித்துக் கொண்ட புளுகம். பாலத்தின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்குத் தாவி, அந்த வழியே ஓடினாள். அவளின் ஓட்டத்தினால் 'அக்பர்' பாலம் குலுங்கியது.

இந்த 'அக்பர்' பாலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. அது பொறியியல் பீடத்தையும் ஏனைய அனைத்துப் பீடங்களையும் இணைக்கும் பாலம். 'அக்பர் ஹோலையும்' ஏனைய அனைத்து விடுதிகளையும் இணைக்கும் பாலம்.

## ஹைக்கூ கவிதைகள்

வாழ்ந்து காட்டுகிறது
மரம்
பாறைகளுக்கு இடையிலும்

திருடியதுதான்
இனிக்கிறது...
தேன் கூடு!

தூக்கத்தில் சிணுங்கும் குழந்தை
நெளிகிறது
முற்றத்து நீரில் நிலா!

- கவிஞர். தக்ஷின், தஞ்சை

அடுத்த தடவை சந்திக்கும்போது, "இந்தா பிடி என்ரை அட்றஸ்" என அவளின் கையிற்குள் தனது முகவரி அடங்கிய துண்டொன்றைத் திணித்து அவளின் கையைத் தீண்டினான் கருணா. எப்பொழுதாவது காதல் கடிதம் எழுதுவாள் என்பது அதன் உள்நோக்கம்.

முதல் வருடம் ஜேம்ஸ்பீரிஸ் ஹோலில் இருந்த காலங்களில் கருணாவும் அவன் கூட்டாளிகள் தவராஜா, நேசன், குலம் போன்றவர்களும் செய்யும் சேஷ்டைகள் பலவாறாக இருந்தன. ஜேம்ஸ்பீரிஸ் ஹோல் மலையில் இருந்தது. அதன் ஒரு அந்தத்தில், கலஹா வீதியை நோக்கி சீமெந்தினால் ஆன ஒரு இருக்கை இருந்தது. அதில் இருந்து கீழே பார்த்தால் கிஷிங் பெண்டும் **(kissing bend)**, எட்டத் தூரப் பார்த்தால் லவ்வேர்ஸ் பார்க்கும் **(lovers park)** தெரியும். மாலை வேளைகள் ப்ளஸ் விரிவுரைகள் இல்லாத சமயங்கள் இவை இரண்டும் போதை தரும். பைனாக்குலர் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கை தரிசிக்கும் குறுகுறுப்பு சொல்லமுடியாதது.

லவ்வேர்ஸ் பார்க்கிற்கு சோடி சோடியாக காதலர்கள் வந்து, ஒரு சோடிக்கு மற்றச் சோடி தெரியா வண்ணம் மரவேர்களில் அமர்வார்கள். ஒருவர் கையை மற்றவர் கோர்த்து ஊஞ்சலாடுவார்கள். செக்கியூரிட்டி கூடத் தேவைப்படும் காலங்களில் குடையும் கூடவரும். குடையின் கீழ் அவர்கள் காட்டில் மழைதான். இந்தக் காட்சிகளை பார்ப்பதற்கு, பைனாகுலர் சூடாகும்வரை அங்கு ஒரு போட்டி நடக்கும். லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் இனவிரோதம் மதவிரோதம் என்றெல்லாம் நடந்தமாதிரிப் பல்கைக்கழகச் சரித்திரத்தில் இல்லை. அங்கே எல்லாம் சமத்துவம்தான். சமரசம் உலாவும் இடம்தான் அது.

ஆறேழு மாதங்கள் கழிந்திருக்கும். ஒருநாள் முதலாம் ஆண்டு மாணவன் ஒருவனுடன், பாலத்தருகே சடைத்து வியாபித்திருக்கும் மரத்தின் பின்னால் பல்லவி ஒதுங்குவதை தவராஜா கண்டுவிட்டான். எட்டிப் பார்த்த தவராஜாவின் தவம் கலைந்து போனது. ஏகப்பட்ட சோடிகள் பட்டாம்பூச்சிகளாக

சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தனர்.

கருணா பல்லவியையும் அவள் குடும்பத்தையும் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தபோது, அவள் தீவிரமாக இன்னொருவனுடன் சுற்றித் திரிந்தாள்.

கருணாவின் காதில் நெருப்பை ஊதிப் பற்ற வைத்தான்.

"எட விசராஞ். அவள் யாரை விரும்பினாலும் என்னட்டைப் பெர்மிஷன் கேட்பேன் என்று சத்தியம் செய்து தந்திருக்கின்றாள்" என்றான் உள்ளூரப் பதட்டத்துடன்.

அவள் தன்னுடன் படிக்கும் சகமாணவன் குகநேசனுடன் சுற்றுகின்றாள் என்று ஒரு வதந்தி உலாவியது. சத்தியமா அது வதந்திதான் என கருணா அடித்துச் சத்தியம் செய்தான்.

ஒருநாள் குகநேசனை இடைமறித்து, "உன்னுடன் படிக்கும் பெண்களில் யார் அழகு?" என்று அவனிடம் ஒரு கணிப்பீடு செய்தான் கருணா.

"பல்லவிதான் நல்ல முகவெட்டு" என்றான் அப்பாவித்தனமாக குகநேசன்.

"முகவெட்டோ? அவளுக்குப் பின்னாலை அலைஞ்சியோ உன்ரை முகத்தை வெட்டுவன்" என்றான் கருணா.

அதன்பின்னர் கொஞ்சக் காலம் அவன் அவள் பின்னால் சுற்றவில்லை.

ஒருநாள் குகநேசன் ஒரு பெண்ணைத் தள்ளிக் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் பரபரவென மின்னி மறையும் வேகத்தில் நுழைந்ததை தவராஜா கண்டுவிட்டான். அன்று கருணாவிற்கு நல்ல காலம். கூட வரவில்லை. மறைந்து மறைந்து குலமும் தவராஜாவும் வேறும் சிலரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

"குகநேசன் போனாப் போகட்டும். பெம்பிளப்பிள்ள யாரெண்டு பார்க்க வேணுமல்லே!"

அவர்களுக்குத் தண்ணி காட்டியபடி சென்ற இவர்களில் குலம் ஒரு மரத்துடன் மோதிவிட்டான். குலம் போட்ட சத்தத்தில், மரத்தின் பின்னால் இருந்த ஒரு சிங்களச் சோடி மரணத்தின் வாசலுக்குச் சென்றுவிட்டது. அவன் கத்தத் தொடங்கினான். காதலி அருகில் இருந்தால் ஒரு ஆணுக்கு வரும் ஆக்ரோஷ உணர்வை அவர்கள் தரிசித்தார்கள்.

"இஞ்சை சோடியில்லாமல் தனியாகவோ கூட்டமாகவோ வரப்படாது" கல்லுகளைத் தூக்கி இவர்கள்மேல் வீசத் தொடங்கினான் அவன்.

அந்தச் சத்தம் கேட்டு பல்லவி எட்டிப் பார்த்தாள். இவர்கள் பல்லவியைக் கண்ட

## படிமம்

அடர் மௌனம்
அறை முழுதும் வியப்பித்திருக்கிறது
எங்கோ உரைத்த சிறுகுச்சி
இங்கயும் சிறிதாய் எரிகிறது
கால்கள் நீட்டிருந்த அவனை
புணரும் வெளிச்சம்
நிழலாய் வடித்தது
சோகத்தின் அடர்மையை!
தாடி தடவி குனிகையில்
பெரிதாய் வீழ்த்தி நீளும்
வெளிச்சம் சுருங்கி மடிந்தது
சிறுகுச்சியால் வரையப்பட்ட
பெருநெருப்பின் அடர்மை
ஓட்டின் முகடுகளில்
படிய துவங்கியது..

- யசோக் குமார்
(பொள்ளாச்சி)

அதிர்ச்சியில், கழிவுச் சாக்கடைக்குள்ளால் ஓடி சரிவு மீது ஏறித் தப்பித்தார்கள்.

அன்று இரவு அவர்கள் அவசர அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். மந்திராலோசனை செய்தார்கள். தவராஜாதான் கூட்டத்திற்கும் ராஜா. இதை எல்லாம் அறிந்தால் கருணா இப்ப தூக்கு மாட்டிச் சாகப் போறானே எனப் பயந்தார்கள். ஒரு திட்டம் தீட்டினார்கள். யாரின் கையெழுத்து ஒரு பெண்ணின் மணிமணியான கை எழுத்தைப் போல வரும் எனச் சோதனை செய்தார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து விசிலடியுடன் விரிவுரைக்கு வந்த கருணாவை காலை பதினொரு மணியின் பின்னர் ஒருவரும் பார்க்கவில்லை. மாலை விரிவுரைகள் முடித்து வந்த, அவனின் றூம்மேற் துஸ்யந்தன் கதவைத் திறந்தபோது அறை இருட்டாக இருந்தது. கட்டிலில் தலை வரைக்குப் போர்த்தபடி பேய்க் கோலத்தில் கருணா படுத்துக் கிடந்தான்.

"என்ன மச்சான் சுகமில்லையோ?" என நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான் துஸ்யந்தன்.

"அது உள் காய்ச்சல்" என்றான் கருணா.

அவனால் அந்தக் கொடுந்துயரத்தைத் தாங்க முடியவில்லை. கடைசியில் அந்தக் கடிதத்தை துஸ்யந்தனிடம் கொடுத்துவிட்டு ஓவென்று அழுதான்.

*அன்புடன் கருணா அண்ணனுக்கு,*

*வணக்கம்.*

*உங்களுக்கு என்னுடன் படிக்கும் குகநேசன் என்பவரைத் தெரியும் என நினைக்கின்றேன். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மனதார விரும்புகின்றோம். நீங்கள் முன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் தகவலை உங்களுக்கு அறியத் தருகின்றேன்.*

*இனிமேல் என்னைப் பார்ப்பதற்கு விடுதிக்கு வரவேண்டாம். வழியில் தனியே கூப்பிட்டுக் கதைக்காதீர்கள். உங்கள் தங்கையாக ஏற்றுக்கொண்டு எங்கள் இருவரையும் வாழ்த்துங்கள்.*

*நன்றி அண்ணா.*

*அன்புள்ள*

*பல்லவி குகநேசன்.*

"நாசங்கட்டு கலியாணம் முடிய முதலே அவனை கணவனாக்கிப் போட்டாள்" என்று சத்தமிட்டபடியே கருணாவிற்கு தேறுதல் சொல்லிவிட்டு கன்ரீனுக்கு சாப்பிடப் போனான்.

"உனக்கு ஏதாவது வேணுமா மச்சான்?"

"ஏதாவது பார்த்து ஒரு சாப்பாட்டுப் பார்சல் வாங்கி வா"

துஸ்யந்தன் கன்ரீனில் இருந்து வரும்போது பார்சலுடன் மட்டும் வரவில்லை, ஒரு பட்டாளத்துடன் வந்தான்.

எல்லாரும் செத்தவீடு கொண்டாடினார்கள். கடிதத்தை அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்தார்கள்.

"மச்சான் விடு. விட்டுத் தள்ளு. என்ன இருந்தாலும் உனக்கு மதிப்பு மரியாதை தந்திருக்கிறாள் பல்லவி. நீ கேட்டபடி கடிதம் போட்டிருக்கின்றாள். அதுவே உனக்குப் போதும்" என்றான் குலம். அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போது தவராஜா குலத்தின் முதுகில் கிள்ளினான்.

"என்ன மச்சான் பல்லவியின்ரை கையெழுத்தும் உன்ரை கையெழுத்தும் ஒண்டாப் பொருந்துது போல கிடக்கு" என்று குலத்தின் காதிற்குள் கிசிகிசுத்தான் துஸ்யந்தன்.

குலம் தன் வாயில் சுட்டுவிரலை வைத்து 'உஸ்' என்றான்.

●

# யாதுமாகினாள்



பிரேமி

யாருமற்ற அந்தப் பொழுதுகளில்
என்னோடு அவளும்
அவளோடு நானும்
அவளது உடனிருப்பில் எந்தன் தனிமை
கணங்கள் யுகங்களாய் கரைந்திடும் இனிமை
மௌனமே பரிபாசையாய் நம் வாய் மொழியோ ஊமை
அடிக்கடி அவளிடம் ஒட்டிக் கொள்வேன்
அலாதி பிரியம் அவளிடத்தில் என
அறிந்தே வைத்திருந்தாள்
தானாக வரவே மாட்டாள்
வந்தால் விட்டுப் பிரியவே மாட்டாள்
அதீத அன்பில் அவளை தட்டி தட்டி தான்
அடிக்கடி புரட்டுவேன்
இயந்திர வாழ்வின் அவசரங்களில்
இடை நிறுத்தி பாதி வழியில் அவளை விட்டும் வருவேன்
விட்ட இடத்தில விட்ட படியே காத்திருப்பாள்
என் ஆத்ம தோழி ...... எனக்காய் அவள் காத்திருப்பாள்
பிடிக்காது போனால் இடை நடுவிலும்
ஒதுக்கி தள்ளுவேன்
கடுகளவேனும் சினமே கொள்ளாள்
என் ஆத்மார்த்த தோழி
அவள் பொறுமையின் சின்னம்



என் கைகளுக்குள் சிறைப்பட்டு சிரிப்பாள்
அவளோடு கை கோர்க்கும் அந்தப் பயணங்களில்
பொன்னுலகம் ஒன்று எங்களுக்குள் விரியும்
பூலோகம் இருப்பது மறந்தே போகும்
கற்பனை பெருவெளியில் ஐக்கியமாவோம்
சிரிக்கவும் வைப்பாள்
சிந்திக்கவும் வைப்பாள்
விந்தை உலகம் காட்டி வியக்கவும் வைப்பாள்
தாலாட்டு பாடி என்னை தூங்கவும் வைப்பாள்
அறிவுலகம் காட்டி என்னை அசர வைப்பதில்
அவள் யதார்த்த வாதி

புத்தகப் பூச்சி நீ புத்தகப் பூச்சி
ஏட்டுச் சுரைக்காய் அது ...
ஏட்டை மட்டுமல்ல நாட்டையும் படி என
அம்மாவிடம் திட்டும் வசவும் வேண்டித் தந்ததில்
அவள் தீவிர வாதி ...
அந்நிய மொழிகளிலோ அவள்
ஆடம்பரமாய்த் தான்
பட்டு வர்ணமும் பளபளப்புமாய்
கொலுவிருக்கும் கோட்டையோ அரண்மனையாய்
பணக்கார வர்க்கம் அவள்
என் தாய் மொழியிலோ என்னவள்
மிகவும் எளிமையானவள்
என்னோடு இரண்டறக் கலப்பதில்
இனிமையானவள்!

# வெற்றியை நோக்கி ...

## வாங்க பழகலாம்

நெல்லை ரவீந்திரன்

சென்னை.

இது போட்டி நிறைந்த உலகம். உலக மக்கள் தொகையில் 2வது இடத்தில் இருக்கும் இந்தியாவில் போட்டி நிலைமையைப் பற்றி சொல்லித் தெரியவேண்டாம். பரப்பளவில் பெரியதாக உள்ள நாடுகளில் கூட மக்கள் தொகை குறைவாகவே இருக்கிறது. ஆனால், குறைவான பரப்பளவு, நிறைவான மக்கள் என இந்தியா திண்டாடுகிறது. இப்படித்தான் பலருடைய கருத்துகளும் உள்ளது. மனித சக்தி என்ற மகத்தான வலிமை இந்தியாவில் அதிகமாக இருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

மற்ற நாடுகளில் இல்லாத அளவுக்கு மனித சக்தி இந்தியாவில் இருக்கிறது. கோடிக்கணக்கான இந்தியர்கள் ஒவ்வொருவரின் சிந்தனையும் வெவ்வேறு கோணங்களில் சிந்திப்பதால் சிந்தனை சக்தியும் நிறைந்து நிற்கிறது. இதை கருத்தில் கொண்டே, சர்வதேச நிறுவனங்கள் பலவும் இங்கு வந்து கடை விரிக்கின்றன என்பது தனிக்கதை.

எனவே, இந்த அளவுக்கு பெரிய அளவிலான கும்பலாகவும் தனித்த சிந்தனைகளுடனும் இருக்கும் ஒரு நாட்டில் வெற்றியாளராக வலம் வர வேண்டுமானால் நாம் தனித் திறமையை வித்தியாசமான முறையில் வெளிக்காட்டுவது மிக அவசியம். அது வெறும் அறிவுத் திறனை மட்டும் சார்ந்தது கிடையாது. வாழ்வியல் திறனை மேம்படுத்துவதிலும் இருக்கிறது. இதையே அனுபவ அறிவு அல்லது வெளி உலக அனுபவம் என அழைக்கின்றனர். அதாவது, பழகும் திறமை முக்கியமானது. அதனால் தான், 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என நம்முடைய முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

கல்லூரி இறுதி ஆண்டு படிக்கும்போதே வளாக தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களில் பலரும் இந்த திறமையாலேயே தேர்வாகின்றனர். மற்றவருடன் எளிதில் பழகும் திறன் உடையவர்களை அனைவருமே விரும்புவார்கள். அடுத்தவரை கவரும் பேச்சாளர்களுக்கும் வெற்றியாளர்களுக்கும் இந்த திறமை இயல்பாகவே வாய்க்கும். பழகும் திறனில் கனிவான பேச்சும் கலந்தால் தேனோடு கலந்த தெள்ளமுதாகி விடும். இனிமையான சொல்லும் கனிவான பேச்சும் எதிரில் இருப்பவரை நம் வசப்படுத்தும். கனி இருக்கும்போது காயை யாராவது விரும்புவார்களா?

அப்படிப் பழகும்போது நம்மை விட சிறியவர்களையும் மரியாதையாக நடத்துவது சிறந்தது. 100 வயதை எட்டும் ஒருவர், சந்திக்கும் அனைவருமே வயதில் அவரை விட சிறியவர்களாகத்தான் இருப்பார்கள். அந்த ஒரு நிலையிலும்

அனைவரையும் மரியாதையாக அணுகுவது சிறந்தது. தனது 90 வயதை கடந்த நிலையிலும் சிறிய குழந்தையை கூட, 'வாங்க, உட்காருங்க' என அழைத்தவர், ஈவேரா பெரியார். அதனால் தான். அவர் இன்றும் என்றும் பெரியாராக இருக்கிறார். இதையே, 'கனம் பண்ணுவதில் முந்திக் கொள்ளுங்கள்' என கிறிஸ்தவர்களின் புனித நூலான விவிலியம் கூறுகிறது.

காலச்சக்கரம் வேகமாக சுழல்கிறது. நேற்று முன்தினம் தான் புதிதாக பிறந்தது போல இருந்த இந்த ஆண்டின் ஓட்டம் முடிந்து எதிரில் புத்தாண்டு தயாராக நிற்கிறது. மனித வாழ்வும் தொடர் ஓட்டம் போலத்தான். அதில் குறுக்கிடும் அனைவருமே நமக்கு தேவை. நம்மை நாடி வரும் ஒவ்வொருவரும், நமக்காக ஏதாவது ஒரு நல்ல வாய்ப்பை உடுத்துக் கொண்டே நம்மை தேடி வருகின்றனர். எனவே, வாங்க பழகலாம் என பழகி வைப்பது முன்னேற்றத்துக்கான முதல் அடியாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு நல்ல வாய்ப்பு வாயில் கதவை தட்டுகிறது. கதவை திறந்து பார்த்தால் துதிக்கையில் பூமாலையை ஏந்தியபடி பிரமாண்டமான யானை கூட நிற்கலாம். அதை வரவேற்பதும், வரவேற்கும் முறையுமே நமது வாழ்க்கை ஓட்டத்தை நிர்ணயிக்கிறது.

எதிர்காலம் நோக்கி அழைத்துச் செல்ல மாலையுடன் காத்திருக்கும் யானையை வரவேற்க செல்லும்போது கையில் தீப்பந்தம் ஏற்றியபடி வாயில் கதவை திறந்தால், அது யார் தவறு?

நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாதவை கூட எதிர்காலத்தில் நிஜமாக கூடும். உதாரணமாக, 15 ஆண்டுகளுக்கு முன் பேஜர் என்ற ஒரு கருவி இருந்தது. வெறும் எஸ்எம்எஸ் தகவலை மட்டுமே அது அளிக்கும். நம்மில் பலருக்கும் அது மங்கலாக நினைவில் வரலாம். பேஜர் புழக்கத்தில் இருந்தபோது அதில் தமிழில் தகவல் வருவதே அதிசயமாக கருதப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில், இன்றைய செல்போன் உலகம் குறித்து யாராவது கற்பனையில் கூறியிருந்தால் அவரை ஒரு மாதிரியானவர் என்று தான் பரிகசித்து இருப்போம். ஆனால், செல்போன் வளர்ந்து ஆன்ட்ராய்டு, ஐ பேட் என பிரமாண்டமாய் வளர்ந்து நிற்கிறது. உள்ளங்கையில் உலகம் அடங்கி விட்டது. இது இன்னும் வளரலாம். நம்மால் நம்ப முடியாத அதிசயங்கள் கூட நடக்கலாம்.

இந்த இடத்தில் மாவீரன் நெப்போலியன் வரலாற்றை புரட்டிப்பார்த்தால் சற்று பொருத்தமாக இருக்கும். உலகையே கதி கலங்கச் செய்த பிரெஞ்சு பேரரசர் நெப்போலியன் போர்னபார்ட் காலத்தில் தான் நீராவி என்ஜின் முதலில்

## தமிழே - பைந்தமிழே

செய்காலுடை மக்களெல்லாம்
வானமதைப் பார்க்கின்றார் ..
பரிதியினை நோக்குகின்றார் ...
சுட்டெரிக்கும் வெய்யிலடங்கி
பெயல் வரும் நாளதையும்
எதிர்பார்த்து நிற்கின்றார் ...
பெயலது ஓங்க செய்கரை தனிலே
நீரது நிரம்பின்,
செய்கால் முழுதும குழம்பது கண்டிடும்..
நீரது வழிந்தோடத தடையாக
செய்கரை தனையுயர்த்தி,
செய்கை தொடங்கிட
உழுபடை கொண்டுழுது
தூவிடுவார் நெல்மணிகள்..
நாளடைவில் அவையாவும்
நற்பயிராய் முளைத்திடுமே....
பெயல் நீரைத் தேக்கிவைத்து
பரிதியவன் உதவியதால்
பயிர்செய்வார் உழவருமே .....

கலா வர்ணன் எஸ். எஸ். எம். றபீக்




வாங்கி விட்டீர்களா?

எழுத்தாளர் விபரத் திரட்டு

புலம்பெயர் ஈழத்து படைப்பாளர்களின விபரங்கள் அடங்கிய தொகுப்பு நூல். அகர வரிசைப்படி தொகுப்பட்டுள்ளது.

ஓவியா பதிப்பகம்

A/c. No.: 896488767
Bank: INDIAN BANK
BATLAGUNDU., TAMIL NADU
Pincode: 624202
IFSC Code: IDIB000B116

oviyapathippagam@gmail.com

வடிவமைக்கப்பட்டது. அதை கண்டுபிடித்த ராபர்ட் புல்டன் என்பவர் நெப்போலியனை சந்தித்து, 'காற்றை கிழித்து படகை செலுத்தும் சக்தி அந்த என்ஜினுக்கு உண்டு' என்பதை அவரிடம் விளக்கிக் கூற அனுமதி கேட்டு காத்திருந்தார். காற்றின் போக்கிலேயே படகுகளையும் கப்பல்களையும் கடலில் செலுத்திய காலம், அது. அதனால், காற்றை எதிர்த்து படகு செலுத்த முடியும் என்பதை நெப்போலியன் துளியும் நம்பவில்லை. அதை கண்டு பிடித்து விளக்கம் கூற வந்தவரையும் முட்டாள் என்றே நினைத்தார். எனவே, 'முட்டாள்களுடன் பேசி எனது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை' என பதிலளித்து ராபர்ட் புல்டனை சந்திக்க மறுத்து விட்டார்.

அந்த கணத்தில் மட்டும், ராபர்ட் புல்டனை மாவீரன் நெப்போலியன் சந்தித்திருந்தால் வரலாற்றின் போக்கு மாறி இருக்கும். கிழக்கு நோக்கி தரை மார்க்கமாக ஆட்சி விஸ்தரிப்பில் முனைந்த நெப்போலியன், மேற்கு நோக்கி கடல் பயணம் செய்திருப்பார். அப்படி சென்று இருந்தால் இங்கிலாந்தும், அமெரிக்காவும் அவரிடம் மண்டியிட்டிருந்திருக்கலாம். பிரெஞ்சு ஆதிக்கமே உலகில் வியாபித்திருக்கலாம். பிரிட்டிஷ் மேலாதிக்கம் என்ற ஒன்று உலகில் தலை தூக்காமலே போய் இருக்கலாம்.

பழக வந்த ஒரு நண்பனை நெப்போலியன் உதாசீனம் செய்ததால் பிரெஞ்சு சாம்ராஜ்யம் விரிவு காணவில்லை. தோல்வியையே கண்டிராத நெப்போலியன், ரஷ்யாவின் வாட்டர்லூ பகுதியில் தோல்வியின் கசப்பை ருசித்தார். எனவே, நினைவில் கொள்ளுங்கள். நம்முடைய வாழ்க்கையில் குறுக்கிடும் ஒவ்வொரு மனிதரும் நமக்கு அவசியம் தேவை. வாங்க பழகலாம் என ஒவ்வொருவருடனும் கை குலுக்குங்கள்.

(வெற்றிப் பயணம் தொடரும்...)




# மறுமலர்ச்சி

**மலர்மதி**
துபாய்.

இலங்கையிலிருந்து உயிர் பிழைத்து வந்த அகதிகள் அந்த முகாமில் கூடியிருந்தனர். இதயங்கள் நைந்துபோயிருந்தாலும், மனங்கள் சோக வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்தாலும், ஒரு கொடிய அரக்கனிடமிருந்து தப்பி, தாயை அடைந்துவிட்ட நிம்மதி அவர்கள் முகங்களில் தெரிந்தது.

பொத்தி, பொத்தி வளர்த்த வயசுப் பெண்களை சிங்கள வெறியர்களுக்குத் தாரை வார்த்த பெற்றோர்கள், சொத்து சுகங்களை விட்டு ஓடி வந்த தொழிலதிபர்கள், கண்ணெதிரே சொந்த மனைவியை கயவர்கள் மானபங்கப் படுத்தியக் கொடுமையைக் கண்டு இடிந்து போன கணவன்மார்கள், பச்சிளங் குழந்தைகளை அநியாயமாய் பலி கொடுத்துவிட்டு வந்த தாய்மார்கள், கட்டியவனை இழந்து விதவைகளாய் மாறிய இளம் மொட்டுக்கள், பெற்றோரை இழந்து அனாதைகளாய் ஆதரவற்ற நிலையை அடைந்த குழந்தைகள்ஞ

இப்படி பலதரப்பட்ட அகதிகளால் அந்த முகாம் நிரம்பி வழிந்துக்கொண்டிருந்தது.

அகதிகளுக்கு ஆறுதல் அளிக்கவும், அவர்களின் குறைகளைக் கேட்டறியவும் நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அரசு நியமித்திருந்தது. அவர்களில் பாலாஜியும் ஒருவன்.

பாலாஜி.

புதிதாய் ஐ.ஏ.எஸ். முடித்த இளம் அதிகாரி. புதுமையாய் ஏதாவது செய்யவேண் டும் என்கிற ஆர்வமும், இளைஞர் சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்கவேண்டும் என்கிற துடிப்பும், இலட்சியமும் கொண்டவன்.

பாலாஜியின் தந்தை கிருஷ்ணன் அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற பல அமைப்புகளில் பல்வேறு பதவிகளை வகிப்பவர். சிறந்த பேச்சாளர். சமூக சேவகர். இவரைப் பற்றி தெரியாதவர்களே இல்லை எனலாம். அவ்வளவு தூரத்துக்குப் பிரபலம்.

அகதிகள் முகாமில் நான்கைந்து பேரிடம் குறைகளைக் கேட்டு குறித்துக் கொண்ட பாலாஜி, மரத்தடியில் அமர்ந்து எங்கோ வெறித்துக்கொண்டிருந்த அந்த இளம் பெண்ணை நெருங்கினான்.

வாழ்க்கையில் இழக்கக்கூடாததை

இழந்துவிட்டு இனி வாழ்வதா? சாவதா? என்கிற யோசனை வலையில் சிக்கித் தவிப்பவளாகத் தெரிந்தாள் அந்த யுவதி.

அவளை நெருங்கிய பாலாஜி, "ஹலோ..." என்றான்.

அவனுடைய குரலைக் கேட்டு மெதுவாகத் திரும்பியவள், எவ்வித சலனமு மின்றி முகத்தை வேறு திசையில் திருப்பிக்கொண்டாள். 'நீ என்ன பெரிசா கிழிச்சிடப்போறே' என்கிற அலட்சியம் தெரிந்தது அவளின் அந்தப் போக்கில்.

அவளிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

ஒருவேளை இவள் ஊமையோ? சந்தேகமடைந்த பாலாஜி, "என்னம்மா, ஒண்ணுமே பேசமாட்டெங்குறே?" என்றான்.

"ப்ச். பேசி என்னங்க பிரயோஜனம்?" விரக்தியுடன் வெளிப்பட்டன வார்த்தைகள்.

"அப்பாடா... இப்பவாவது வாயைத் திறந்தியே..." என்றவன், "இதோ பாரும்மா, நான் ஓர் அரசு அதிகாரி. என்கிட்ட நீ தைரியமா பேசலாம். எந்தவித குறை இருந்தாலும் அதை தீர்க்க நாங்க கடமைப் பட்டிருக்கோம். அதனால எதுவாக இருந்தாலும் தயங்காம சொல்லு."

சிறிது நேரம் மௌனமாக இருந்தவள், அவன் கொடுத்த ஆறுதலான, ஆதரவான பேச்சில் புத்துணர்ச்சிப் பெற்றவளாக மெதுவாய் பேச ஆரம்பித்தாள்.

"என் பேரு செல்வி. பெற்றோருக்கு ஒரே பொண்ணு. யாழ்பாணத்தில் ஒரு கல்லூரியில் படிச்சுக்கிட்டிருந்தேன். சம்பவம் நடந்த அன்னைக்கு வெளியே ஒரே கலவரமா இருந்துச்சு. அதனால நாங்க யாரும் வெளியே போகலை. கதவைப் பூட்டிக்கிட்டு வீட்டுக்குள் ளாறேயே இருந்தோம். ராத்திரி எட்டு மணி இருக்கும். நாங்க குடியிருந்த தெருவில ஒரே கலாட்டா. கூச்சல், குழப்பம். பூட்ஸ் கால்களின் சப்தம். மரண ஓலம். நாங்க பயந்து நடுங்கிக்கிட்டிருந்த சமயத்தில் யாரோ கதவைப் பலமாகத் தட்டினார்கள். நாங்க திறக்காத தால் கதவு உடைக்கப்பட்டது. 'திமு,திமு'வென உள்ளே நுழைந்த சிங்கள வெறியர்கள், கண் ணிமைக்கும் நேரத்துல என் அப்பாவையும், அம்மாவையும் துப்பாக்கியால் சுட்டு..." மேற்கொண்டு பேச இயலாதவளாய் அழ ஆரம்பித்தாள் செல்வி.

"செல்வி.. நடந்தது நடந்து போச்சு. இனி ஆகவேண்டியதைத்தான் யோசிக்கணும். ம்.. மேலே சொல்லு.." என்று அவளை உசுப்பினான் பாலாஜி.

துப்பட்டாவால் கண்களைத் துடைத்துக் கொண்டே அவள் தொடர்ந்தாள்:

"என் கண்ணெதிரே என் அப்பாவையும், அம்மாவையும் கொன்னுபோட்ட அந்தப் பாவிங்க, என்னைத் தூக்கிட்டுப் போய் அவங்க ராணுவ தளபதிகிட்ட ஒப்படைச்சுட்டாங்க. அந்த வெறியன் என்னை..." முடிக்காமல் மீண்டும் கேவி, கேவி அழத் தொடங்கினாள். "அவன் உன்னை என்ன செஞ்சான்? சொல்லு?"

"நான் எவ்வளவோ கதறினேன். துடிச்சேன். மன்றாடினேன். அவன் என்னை விடவேயில்லை. பாழாக்கிட்டான்."

"அடப்பாவி... அப்புறம்..?"

"அவன் மது அருந்திவிட்டு அசந்த சமயத்தில் நான் நைசாக அங்கிருந்து நழுவி தப்பிச்சுட்டேன். இந்தியாவை நோக்கி புறப்பட இருந்த கப்பலில் ஏறி அகதிகளோடு அகதியா எப்படியோ வந்து சேர்ந்துட்டேன். இங்கே வந்த பிறகுதான் புரியுது நான் ஏன் இங்கே வந்தேன்? வாழ்க்கையில் எல்லாமே இழந்துவிட்ட பிறகு எதுக்கு இனி வாழணும்? யாருக் காக வாழணும்? வரும் வழியிலே கடலில் குதிச்சு செத்திருக்கலாமே..?"

செல்வியின் சோகக் கதையைக் கேட்ட பாலாஜியின் மனம் சுக்கு நூறாய்ச் சிதறிப்போனது. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்துபோனவன், ஒரு முடிவுக்கு வந்தவனாய்,

செல்வியைத் தீர்க்கமாய்ப் பார்த்தான்.

"செல்வி.. உனக்கு ஆதரவா யாருமில்லைங்கற ஒரே காரணத்துக்காகத்தானே நீ தற்கொலை செய்துக்கலாம்னு துணிஞ்சிருக்கே?"

"அது மட்டுமில்லை. என் கற்பு களங்கப்பட்டுப்போன பிறகு உயிர் வாழறதுல என்ன அர்த்தம் இருக்கு சொல்லுங்க?"

"சரி, இந்த நிமிஷத்துல உனக்கு ஒருவன் வாழ்வளிக்க முன் வந்தா நீ என்ன பண்ணுவே?"

பாலாஜியின் இந்த திடீர் கேள்வி அவளைத் தாக்கியிருக்கவேண்டும், 'சட்'டென நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

கெட்டுச் சீரழிஞ்சுப்போனவளைக் கட்டிக்க இந்தக் காலத்தில் யாருமே முன்வர மாட்டாங்க."

"நீ வேணும்னே கெட்டுப்போகலையே? ஒரு மிருகத்துக்கிட்ட சிக்கி சின்னா பின்னமாகியிருக்கே. நீயாகப் போயிருந்தா உன்னை நடத்தைக் கெட்டவள்னு சொல்லலாம். ஆனால், உன் விருப்பத்துக்கு எதிராக நடந்தது பலாத்காரம்தானே?"

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"


"செல்வி... உனக்கு வாழ்வு கொடுப்பது என்கிற முடிவுக்கு நான் வந்திருக்கேன்."

"என்ன..?" 'திக்'கென அதிர்ந்தாள். பேச்சொன்றும் எழாமல் சப்தநாடியும் ஒடுங்கி விட்டது அவளுக்கு.

இருக்காதா பின்னே?

சீரழிந்த அபலைப் பெண்ணொருத்திக்கு ஓர் உயரதிகாரி அவளைப் பற்றி எல்லாம் அறிந்த பிறகும் வாழ்வளிக்க முன் வந்தால் எந்தப் பெண்ணால் அதிர்ச்சி அடையாமல் இருக்கமுடியும்?

பிரமை பிடித்து செல்வி சிலையாய்



சமைந்துவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைதான்.

சொற்பொழிவு நடக்கும் அரங்கத்தில் ஏகப்பட்ட கூட்டம்.

இன்றைய இளைஞர் சமுதாயத்தைப் பற்றி அனல் பறக்கப் பேசிக் கொண்டிருந்தார் கிருஷ்ணன்.

"இன்றைய இளைஞர்கள் புரட்சி செய்யவேண்டும். எப்படிப்பட்ட புரட்சி? சமுதாயத்தை மாற்றக்கூடிய புரட்சி. சமூக அவலங்களை அகற்றக்கூடிய புரட்சி. பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்துவதையும், அர்த்தால் என்கிற பெயரில் பொதுமக்களின் சொத்துக்களை சூரையாடுவதையும்தான் புரட்சி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவல்ல புரட்சி. அபலைப் பெண்களுக்கும்,

ஆதரவற்ற அனாதை பெண்களுக்கும், வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் ஏழைப் பெண்களுக்கும் மறுவாழ்வளிக்க இளைஞர்கள் முன் வரவேண்டும். இதுதான் புரட்சி." கூட்டத்தில் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

மாலை, மரியாதையுடன் காரில் ஏறி விடைபெற்றார் கிருஷ்ணன்.

"நீ என்ன சொல்றே பாலாஜி?" என்று அதிர்ந்தார் கிருஷ்ணன்.

"செல்வி என் மனசுல ஆழமாய்ப் பதிஞ் சுட்டாப்பா..."

"பைத்தியக்காரத்தனமாய் உளராதே. நீ ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. இன்னும் சில நாட்களில் ஒரு மாவட்டத்துக்கே ஆட்சித்தலைவரா வரப்போகிறவன். அவள் யாருன்னே நமக்குத் தெரியாது. எந்த ஜாதி, எந்த குலம்னுகூட தெரியாத அகதிகள் கூட்டத்திலிருந்து வந்த அசிங்கமான பொண்ணு. போயும், போயும் அவளையா உன் வாழ்க்கைத் துணையா தேர்ந்தெடுத்திருக்கே? உனக்கென்ன புத்தி பேதலிச்சுப் போச்சா? நீ ஒரு பெரிய அதிகாரி என்பது ஒரு பக்கம் இருக்க, என்னைப் பத்தி நீ யோசிச்சுப் பார்த்தாயா? நான் யார்? என் அந்தஸ்த்து என்ன? மக்களிடையே எனக்கிருக்கிற செல்வாக்கு என்ன? என் வீட்டு மருமகளா வருவதற்கு எப்படிப்பட்ட பெரிய, பெரிய இடங்களிலிருந்து பெண்கள் துடிச்சிக்கிட்டிருக்காங்கன்னு உனக்குத் தெரியுமா?"

"அப்பா.. நீங்க ஒவ்வொரு கூட்டத்திலேயும் வாய் கிழியப் பேசிட்டு வர்றீங்களே, இன்றைய இளைஞர்கள் அபலைப் பெண்களுக்கு வாழ்வளிக்க முன்வர வேண்டும்னு அதைத்தானே நானும் பின்பற்றப் போறேன்? அதுக்காக நீங்க சந்தோஷப்படாம இப்படி ஏன் ஆத்திரப்படறீங்க?"

"அது.. அது.. ஊர் உலகத்துக்குச் சொல்லி யிருக்கலாம். நீ ஏன் அதை உனக்காக எடுத்துக்கறே?"

"ஓ.. அப்படின்னா இத்தனை நாளா நீங்க பேசிட்டு வர்றதும் சமூக சேவைங்கற பேர்ல நாடகமாடறதும் எல்லாமே பொய்ப் பித்தலாட்டம்தானா?"

"டேய், பாலா... வாயை அடக்கிப் பேசு. நீ யார்கூட பேசிக்கிட்டிருக்கேன்னு தெரியுமா?" என கஜித்தார் கிருஷ்ணன்.

"நல்லாவே தெரியும். வெறும் பேச்சால் மக்களை ஏமாத்திக்கிட்டுத் திரியற ஒண்ணாம் நம்பர் ஃப்ராடுகிட்டத்தான் பேசிக்கிட்டிருக்கேன்."

அதிர்ந்துபோனார் கிருஷ்ணன்.

"இதற்காகத்தானா நான் உன்னை வளர்த்து, படிக்கவைத்து, பெரிய ஆளாக்கி யது? ஒண்ணு மட்டும் புரிஞ்சிக்கோ. நான் சொல்றதைப்போல் நீ நடக்கலைன்னா உனக்கு இந்த வீட்டில் இடமில்லை..."

"இவ்வளவு மோசமான ஆளோடு எவன் இருப்பான்? இப்போதே நான் வீட்டை விட்டுப் போகப்போறேன்."

"என் சொத்திலிருந்து உனக்கு ஒரு பைசாவும் கிடைக்காது."

"யாருக்கு வேணும் அந்த சொத்து? நேர்மையான வழியில சம்பாதிச்சிருந்தா பரவாயில்லை. ஊரை ஏமாத்தி சேர்த்த சொத்தை நீங்களே வெச்சுக்குங்க. என்னை வளர்த்து, ஆளாக்கி, படிக்கவெச்ச செலவை நான் கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குத் திருப்பிக்கொடுத் துடறேன்..."

கிருஷ்ணன் பிரமைப் பிடித்தவராய் அதிர்ந்து நின்றார்.

பாலாஜி அங்கிருந்து புயலாய்க் கிளம்பினான்.

அவனுடைய நடையில் சமுதாயத்தை மாற்றியமைத்து ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கக்கூடிய வேகம் அதிகமாகவே தென்பட்டது. ●



# கும்மியடி வஞ்சியே கும்மியடி!

(கும்மிப் பாடல் - இது வெண்பாவின் இனமாகும்)

கும்மியடி வஞ்சியே கும்மியடி - நன்றே
குலவிக் குதித்துநீ கும்மியடி!
இம்மை மறுமையின் இன்பமே - இந்த
இகத்தின் உயிர்ப்பேநீ கும்மியடி!

தாயுடன் தாதியாய்த் தங்கையாய் - சான்று
தாரமாய்த் தண்குலப் பெண்ணானாய்!
பாயும் நதியெனப் பாவலர் - நாளும்
பாடிப் புகழும் பதுமையானாய்!

இல்லறம் காத்திடும் பண்பே - உலகில்
ஏற்றங்கள் பெற்றிடும் மானுயர்வே!
சொல்லறம் பேணிடும் பூவையே - என்றும்
சோர்விலா நல்லறம் பூண்டிடுவாய்!

தாய்மை துலங்கும் தளிரே - உயர்
சான்றுடைப் பெண்மைத் தகைமையே!
வாய்மையின் வாழ்வே வளமே - எழில்
வனப்பே வடிவாம் வலம்புரியே!

கல்வியில் கட்டிலா ஞானத்தில் - சீரில்
காசினி மீதினில் ஓங்கிநின்றாய்!
செல்வச் சிறப்புடன் சார்ந்தோர் - திகழச்
சேர்த்தாய் நிதிதனைத் தேன்மொழியே!

வீட்டினுள் உந்தனைப் பூட்டியே - முன்னோர்
விலைமதிப் பெண்ணிடா மாந்தரானார்!
நாட்டினைக் காக்கப் புறப்பட்டாய் - நன்றே
நானிலம் போற்றிடப் போர்புரிந்தாய்!

திருமண வாழ்வை வெறுத்தாய் - செயல்
திறமையைக் காட்டியே விண்ணுயர்ந்தாய்!
கரும்பெனும் கல்வி துறந்தே - கழுத்தில்
கயிற்று விடமும் அணிந்துநின்றாய்!

கொடும்பகை நீக்கக் களம்புகுந்தாய் - இந்தக்
குவலயம் வாழ்த்தும் குலவுபெண்ணே!
வடுக்கள் புரிந்துமே வஞ்சகர் - உன்னை
வருத்தினர் வஞ்சிநீ வாடிடாதே!

காலமும் காட்சியும் மாறுமே - உந்தன்
கனவும் விரைவினில் மெய்ப்படுமே!
ஞாலத்தில் நீதியு மோங்கிடுமே - எங்கள்
ஞாயிறு கூறிய வார்த்தையாமே!

பவானி தர்மகுலசிங்கம்

(சர்வதேச மகளிர் தினத்தையொட்டி
எழுதப்பட்டது)

# தொல்குடித் தமிழ்ச்சமூகத்தின் விருப்பமான அடிசிலும் விருந்தோம்பல் மரபும்

## *ஆய்வு முன்னுரை*

இவ்வுலகில் முதலில் படைக்கப்பட்ட மிகச்சிறிய ஒருசெல் உயிரி அமீபா முதல் மிகப்பெரிய உயிரினம் வரை அடிப்படைத் தேவைகளில் முதலாவதாகக் கருதுவது உயிர்வாழத் தேவையான உணவினைப் பெறுவதே. இந்நோக்கத்திற்காகவே ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை உயிர்கள் அனைத்தும் போராடிக் கொண்டிருக்கின்றன. இத்தேவைகளில் பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் இருப்பவர்களிடம் பறித்துண்ணும் மிருககுணம்தான் மனிதரிடத்தில் தோன்றிய முதல் போரும்கூட. எனவேதான், இன்றைய நாகரீக மனிதனும் அஃறிணை நிலையிலிருந்தே தோற்றம் பெற்றதாகச் சொல்கிறார்கள். எதுவாயினும் பரிணாம வளர்ச்சியில் உயர்திணை முதல் அஃறிணை வரை உயிர்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்துதான் வாழவேண்டும் என்பது தவிர்க்கமுடியாத உலகநியதி. இவற்றில் உயிர்க்கொலை என்பதெல்லாம் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு குழுவினரின் உள்ளார்ந்த அரசியல். பண்டைத் தமிழ்ச்சமூகம்தான் நாகரிகத்தின் தொட்டில் என்பர். அறிஞர்களின் கூற்றுப்படி வேட்டையாடும் நிலையிலிருந்த தொல்குடிச் சமூகம் நாகரீக முதர்ச்சியி;ல் ஓரளவேனும் அடியெடுத்து வைத்து வாழத்தொடங்கிய காலகட்டத்தில் அவர்களுக்கான உணவுமுறைகளை எவ்வாறு பெறத்தொடங்கினர். அந்தக்குழு வாழ்வில் பேணிக்காக்கப்பட்ட குடும்ப உறவுமுறைகளும், விருந்தினரை அனுசரிக்கும் வழக்கமும் அவர்களிடம் எவ்வாறு இருந்தது என்பது போன்ற கருத்தாடல்களை முன்வைத்து இக்கட்டுரை விவரிக்கப்பட்டுள்ளது.

## *குறிஞ்சி நிலமக்களின் அடிசில்கள்*

சோழநாட்டில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் குறிஞ்சி நிலத்துக் கருப்பொருளான தேனையும் கிழங்கையும் நெய்தல் நில மக்களுக்குப் பண்டமாற்றும் செய்து

நெய்தல் நிலத்து மீன் நெய்யுடன் 'நறவு' என்று சொல்லக்கூடிய கள்ளைப் பெற்றுள்ளனர். இவற்றைக் கொண்டு பண்டிகைக் காலங்களில் சிறப்பு உணவாக நெய் கலந்த அடிசில்களை சமைத்துள்ளனர். இச்செய்தியினை,

"தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்" (பொருநராற்றுப்படை, 214217)

என்ற பொருநராற்றுப்படை எடுத்துரைக்கிறது. மேலும்,

"வளைக்கை, கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேலை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி கடைஅடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட...." (சிறுபாணாற்றுப்படை 136140)

என்ற சிறுபாணாற்றுப்படை பாடலில் வரும் தலைவி ஒருத்தி வறுமை காரணமாக தன் குடும்ப உறுப்பினர்களுக்கு குப்பைக் கீரையை கடைந்து உப்பில்லாமல் சமைத்துப் படைத்தாள் என்ற செய்தியையும் இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

## *பாலை நிலத்தாரின் அடிசில்*

பாலை நிலத்தில் வாழும் மக்கள் வேட்டுவர் என்றழைக்கப்பட்டனர். "வேட்டுவர் என்பவர் வேட்டைத் தொழில் செய்பவர் எனப் பொருள்படும். அஃது எயினர் என்னும் குலப்பெயருடையார் மேல் தொழற்பெயராகி வந்தது என்பார் இளம்பூரணர். (தொல்காப்பியம்.பொருளதிகாரம்.ப.20) பாலைநிலத்தில் வாழும் வேட்டுவர்கள் புளியஞ்சோற்றையும், காட்டுப்பசுவின் சூட்டிறைச்சியையும் தங்கள் உணவாக உண்டனர் என,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்" (சிறுபாணாற்றுப்படை 175177)

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் வழி அறியமுடிகிறது.

## *மருதநிலத்தாரின் அடிசில்*

மருத நிலத்து மக்கள் உழவர் எனப்பட்டனர். இவர்கள் வயல் நிலத்தைப் பண்படுத்தி நெல் விளைவித்து அரிசிச்சோறு உண்டனர் என்பதற்கு பின்வரும் பாடலடிகளைச் சான்றாகக் கூறலாம்.

"அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையோடு பெறுவீர்" (சிறுபாணாற்றுப்படை, 194195)

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் உணர்த்தும் செய்தியாவது, ஓய்மான் நாட்டு நல்லியக் கோடனை சிறிய பாணர்கள் பார்க்கச் சென்றபோது (வீமன் அருளிய மடைநூலின் விதிப்படி சமைத்த) சமையல் கலையின் விதிப்படி சமைத்த உணவு வகைகள் அனைத்தையும் பொன்னாலான வட்டிலில் இட்டு உண்ணச் செய்தான் என்கிறது மேற்கண்ட பாடல். மேலும், உண்ணுவதற்கு முன் உள்ளத்தில் களிப்பை உண்டாக்கக் கூடிய பாம்பு வெகுண்டன்ன தேறல்) என்று சொல்லக்கூடிய மதுபான வகைகளும் அரசவை உணவில் இடம்பெற்றுள்ளன. இதனை,

"பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி
காளரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன், பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்" (சிறுபாணாற்றுப்படை, 238241)

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது. இதுபோன்ற பண்டைத் தொல்குடிச் சமூகத்தின் உணவு முறைகளின் எச்சங்களை நடைமுறை வாழ்க்கையிலும் மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதுதான் ஆச்சரியம் கலந்த உண்மை. ஏனெனில், நம்முடைய இல்லத்திற்கு வருகின்ற உறவினர்களுக்கு இறைச்சி வகை அடிசில்கள் சமைத்துப் பரிமாறப்படுகிறது. சாப்பாட்டிற்கு முன் (மது அருந்தும் பழக்கமுடைய ஆண்களுக்கு) மதுபானங்கள் கொடுத்து விருந்தளிப்பதை இதனுடன் ஒப்பிட்டுக் கூறலாம். மலைப்படுகடாம் என்று சொல்லக்கூடிய கூத்தராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் நன்னனின் மலைநாடான சவ்வாதுமலைச் சிற்றூர்களில் வாழ்ந்துவந்த மக்கள் தினையரிசிச் சோற்றையும் நெய்யில் சமைத்த இறைச்சி வகை உணவுகளையும் உண்டனர் என இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும்,

"பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குருஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்" (மலைபடுகடாம், 168169)

என்ற பாடலில் வரும் நன்னனுடைய மலைநாட்டில் வாழ்ந்த குறிஞ்சிநில மக்கள் பெண் நாய் கடித்துக் கொணர்ந்த உடும்பின் இறைச்சியையும், கடமான் இறைச்சியையும், பன்றி இறைச்சியையும் தங்கள் உணவாக உட்கொண்டதோடு, நெல்லைக் கொண்டு உருவாக்கிய கள்ளினையும், தேனை மூங்கிற்குழையுள் வைத்துப் பதப்படுத்தி மதுபானமாக்கிப் பருகியுள்ளனர் என்ற செய்தியையும் அறியமுடிகிறது. மேலும்,

"தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை" (மலைபடுகடாம். 425426)

என்ற மலைபடுகடாம் பாடலில் வருகின்ற, மலைநாட்டைக் காவல் புரிந்த வீரர்கள், வேட்டையாடிய இறைச்சியையும் மலையில் விளைந்த கிழங்குகளையும் உணவாக உண்டனர் என்கிறது மேற்கண்ட பாடல்.

"அருவி தந்த பழம் சிதை வெண் காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

முளவுமாத் தொலைச்சிய பைநிணப் பிளவை
பிணவுநாய் முடிக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இன் புளிக் கலந்து மா மோர் ஆக
கழை வளர் நெல்லின் அரி உலை ஊழத்து
வழை அமல் சாரல் கமழத் துழைஇய" (மலைபடுகடாம் 171181)

என்னும் பாடலில் புலப்படும் செய்தியாவது, அருவி நீரில் அடித்து வரப்பட்ட பலாப்பழத்தின் (கொட்டைகளை) விதைகளை உலரவைத்து மாவாக்கி மோர்குழம்புடன் சேர்த்துச் சமைத்துள்ளனர். இது மூங்கிலரிசிச் சோற்றுக்கு பொருத்தமான குழம்பாக இருந்ததால் இதனை இந்நிலத்து மக்கள் விரும்பி உண்டனர் என்கிறது மேற்கண்ட மலைபடுகடாம் பாடல். இதுபோன்று புளிக்குழம்பு சமைக்கும் தலைவியின் செயலை குறுந்தொகை 167 வது பாடல் பதிவுசெய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" (குறுந்தொகை, 167)

என்ற குறுந்தொகை பாடலில், புதிதாக திருமணமான பெண் அடிசில் வகைகளைப் பற்றி முழுமையாக அறிந்திராதவள். இருந்தும் முதன்முதலில் மோர் குழம்பு சமைத்து கணவனுக்கு அளிக்கின்ற போது கணவன் அதனை அகமகிழ்ந்து சுவையோ சுவையென உண்டான் என்ற காட்சியை செவிலித்தாயின் கூற்றாக கூடலூர் கிழார் பாடியுள்ளார். தொல்குடிச் சமூகத்தின் பழமையை பேணும் நம்மவர்களும் புளிக்குழம்பு, மோர்க்குழம்பு போன்ற அடிசில் வகைகளை இன்றளவும் உணவுமுறையில் சேர்த்துக்கொள்வது பண்டைத்தமிழரின் எச்சம் எனலாம்.

"இழுதின் அன்ன வால்நிணம் செருக்கி
.........................................
இருள் துணிந்தன்ன ஏனம் காணின்
முளி கழை இழைந்த காடுபடு தீயின்

நளிபுகை கமழாது இறாயினிர் மிசைந்து
துகள் அறத் துணிந்த மணிமருள் தௌ;நீர்
குவளை அம் பைஞ்சுனை அசைவுவிடப் பருகி
மிகுத்துப் பதம் கொண்ட பரூஉக்கண் பொதியினிர்" (மலைபடுகடாம். 244255)

என்ற பாடல் உணர்த்தும் செய்தியாவது, பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் வாழ்ந்த பேரரசுகளும் சிற்றரசுகளும் வள்ளல்களும் பொருளுடையச் சமூகமாக விளங்கியுள்ளனர். வறுமையுற்ற கூத்தர் சமூகத்தவர் இவர்களிடம் பொருளீட்டுவதற்காகப் பலமைல் தூரம் அடர்ந்த காட்டுப்பகுதியான மலை

நாட்டிற்கு நடந்தே சென்றுள்ளனர். அப்போது காட்டுப் பன்றியை வேட்டையாடி அதன் உடம்பிலுள்ள மயிரை மூங்கில் நெருப்பால் தீய்த்து சுத்தம் செய்து அதன் இறைச்சித் துண்டங்களை தீயில் வாட்டி உணவாக உண்டதோடு, எஞ்சிய இறைச்சியை வழிப் பயணத்தில் உண்பதற்காக கையில் எடுத்துச் சென்றனர் என்ற செய்தியினை மேற்கண்ட பாடல் பதிவுசெய்துள்ளது.



எனவே, பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் இறைச்சியை தீயில் சுட்டு உண்ணும் வழக்கம் அக்காலத் தமிழர்களின் வாழ்வில் நடைமுறையிலிருந்ததை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. நவீன, அதிநவீன மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருந்தாலும் இன்றைய சூழலிலும் மக்கள் உயிர்வாழத் தேவையான உணவுமுறைகளை பெரும்பாலும் நெருப்பில் சுட்டும், வேகவைத்தும் உண்ணுவது தொல்குடிச் சமூகத்தின் வாழ்வியல் எச்சமே எனலாம். எனவேதான், கிராமப்புறங்களில் இறைவழிபாட்டிற்காக வெள்ளாட்டுக் கிடாயினை நேர்த்திக்கடனாக பலியிட்டு அதன் தலையை தீயில் தீய்த்து அதன் செவிகளை அறுத்து அப்படியே உணணுகிற வழக்கத்தினை இன்றும் காணமுடிகிறது. பக்தி இலக்கியத்திலும், இவ்வழக்கமுறையை கண்ணப்பநாயனார் புராணத்தில் தின்னப்பர் என்று சொல்லக்கூடிய கண்ணப்பர் காட்டுப்பன்றியை வேட்டையாடி அதன் இறைச்சித் துண்டுகளை தீயில் சுட்டு தனது பக்தியின் பேரன்பினை வெளிப்படுத்த சிவபெருமானுக்கு படைத்ததாக (பெரியபுராணம்;, பா.எண். 125) இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இதனடிப்படையில்தான், ஆற்றுப்படையில் வருகின்ற அரசர்களெல்லாம் தன்னை நாடி வருகின்ற இரவலர்களுக்கு தனது அன்பின் மிகுதியைக் காட்டுவதற்கு இறைச்சி கலந்த உணவுகளையே விருந்தளித்துள்ளனர் என அறியமுடிகிறது. எனவே, தொல்குடிச் சமூகத்தினர் அன்பின் மிகுதியால் வழங்கப்பட்ட உணவு வழக்காற்றின் நீட்சி நடைமுறை வாழ்வின் எச்சங்காக இன்றும் நம்மவர்களின் விருந்தோம்பல் முறையில் இருப்பதை காணமுடிகிறது.

*முல்லை நிலத்தாரின் அடிசில்கள்*

தொண்டை நாட்டில் வாழ்ந்த முல்லைநில மக்கள் பாலையும் திணையரிசிச் சோற்றையும் உண்டுள்ளனர்.

"இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்" (பெரும்பாணாற்றுப்படை, 167168)

என்றும், வரகரிச் சோற்றுக்கு அவரைப் பருப்புக் குழம்பை உணவாக உண்டதை,

"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி
புகர்இணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக்கு அட்டி பயில்வுற்று
இன்சுவை மூரல் பெறுகுவீர்" (பெரும்பாணாற்றுப்படை 192196)

மேற்கண்ட பெரும்பாணாற்றுப்படை பாடலும் விளக்குகிறது. இவ்வுணவு முறைகள் அனைத்தும் அந்நிலத்தில் கிடைக்கின்ற பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

## *பெரும்பாணாற்றுப்படை*

"நீழல் முன்றில் நிலஉரல் பெய்து
குறுங்காழ் உலக்கை ஓச்சி, நெடுங்கிணற்று
வல்ஊற்று உவரி தோண்டி, தொல்லை
முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி
வாராது அட்ட, வாடுஊன் புழுக்கல்
. . . . . . . . . . . . . . . . . . . . . .
தெய்வ மடையின் தேக்கிலைக் குவை" (பெரும்பாணாற்றுப்படை, 96104)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடலில், எயிற்றியர் புல்லரிசியை உரலில் குத்தி ஊற்றுநீர் கொண்டு சமைத்தனர் என்றும், நெல்லரிசிச் சோற்றுக்கு கருவாட்டுக் குழம்பு சமைத்து தேக்கிலையில் விருந்தினருக்குப் படைக்கும் வழக்கமும் அவர்களிடம் இருந்துள்ளதை மேற்கண்ட பாடல் விளக்குகிறது.

மேலும், ஈந்தின் (ஈச்சமர விதை) விதை போன்ற சிவந்த செந்நெல் சோற்றுடன் வேட்டை நாய்கள் கடித்துக் கொணர்ந்த உடும்பின் பொரியலோடு உணவினைச் சமைத்து தங்கள் விருந்தினருக்குப் படைத்தனர் என்ற செய்தியை,

"களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி
குமலி தந்த மனவுச்சூல் உடும்பி;ன்
வறைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவீர்" (பெரும்பாணாற்றுப்படை, 130 133)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் வழி அறியமுடிகிறது.

## *புளியங்கூழ்*

பெரும்பாணாற்றுப்படைத் தலைவன் நன்னன் ஆண்ட மலைநாட்டில் வாழ்ந்த முல்லை நில மக்கள் சிவந்த அவரை பருப்பையும் (விதைகள்) மூங்கிலரிசியையும், மேட்டுநிலத்தில் விளைந்த நெல்லரிசியையும் கலந்து, புளி கரைக்கப்பட்ட உலையில் இட்டு புளியங்கூழ் சமைத்து உண்டனர். அத்துடன் வெள்ளாட்டு

இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய ~ஊன்துவை அடிசில்— என்று சொல்லக்கூடிய (பிரியாணி) கரிச்சோற்றையும் தினைமாவையும் சமைத்து உண்டுள்ளனர். இதனை,

"இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் உடீஇ
கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை
அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்
அருங்கடித் தீம்சுவை அமுதொடு பிறவும்
விரும்புடை மரபின் கரப்புடை அடிசில்" (பெரும்பாணாற்றுப்படை, 470476)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

மருதநில (தோப்புக் குடி) மக்களின் அடிசில்கள்

மருதநிலத்தில் வாழ்ந்த உழவர்கள் தோப்புக் குடிமக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்த உழவர் சமுதாய மக்களின் உணவு வகைகள் பின்வரும் பாடலடிகளில் கூறப்படுகிறது.

"தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்
கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரள்அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பல் தாரம் முனையின் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவீர்" (பெரும்பாணாற்றுப்படை, 356362)

மேலும், ஓய்மானாட்டு நல்லியக் கோடனின் நாட்டில் வாழ்ந்த மருதநில மக்கள் வெண்சோறும் அதற்கு குழம்பாக நண்டும் பீர்க்கங்காயும் கலந்து சமைத்த கூட்டு அடிசிலை தங்கள் உணவாக உண்டனர் என்பதற்கு பின்வரும் பாடலடிகள் சான்றாகும்.

"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவீர்" (சிறுபாணாற்றுப்படை 193195)

என்ற பாடல் சிறுபாணாற்றுப்படை பாடலடிகளும்,

"கருங்கை வினைஞர் காதல்அம் சிறாஅர்
பழஞ்சோற்று அமலை முனைஇ வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து" (பெரும்பாணாற்றுப்படை, 223226)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடலடிகளும் பண்டைத் தமிழ்சமூகத்தின் அடிசில் முறைகளை அடையாளம் காட்டுவனவாக அமைந்துள்ளன. தொண்டைநாட்டு மருதநிலச் சிறுவர்களுக்கு காலைநேர உணவாக பழையசோறு

வழங்கப்பட்டதையும், அவலை இடித்து உண்டனர் என்ற செய்தியினையும் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றன. அத்துடன் நெல்சோற்றுக்கு பெட்டைக் கோழிப் பொரியல் ஏற்ற அடிசிலாக விரும்பி உண்டதையும் அறியமுடிகிறது.

"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்
தோடிமாண் உலக்கைப் பருஉக் குற்று அரிசி
குலீடி வெள்உலைக் கொளீஇ நீழல்
ஓங்குசினை மாவின் தீம்கனி நறும்புளி
மோட்டுஇரு வராஅல் கோட்டுமீன் கொழுங்குறை,
செறுவின் வள்ளை, சிறுகொடிப் பாகல்,
பாதிரி ஊழ்முகை அவிழ்விடுத்து அன்ன
மெய்களைந்து இனனொடு விரை"...
மூழ்ப்பப் பெய்த முழு அவிழ்ப் புழுக்கல்,
அழிகளின் படுநர் களிஅட வைகின்,
பழஞ்சோறு அயிலும் முழங்க நீர்ப் படப்பைக்
காவிரிக் கிழவன், மாயா நல்இசைக்
கிள்ளி வளவன் உள்ளி, அவற் படர்தும் ;
செல்லேன் செல்லேன், பிறர்முகம் நோக்கேன் ;
நெடுங்கழைத் தூண்டில் விடுமீன் நொடுத்து,
கிணைமகள் அட்ட பாவல் புளிங்கூழ்
பொழுது மறுத்து உண்ணும் உண்டியேன், அழிவுகொண்டு,
ஒருசிறை இருந்தேன்; என்னே! 'இனியே,
அறவர் அறவன், மறவர் மறவன்,
மள்ளர் மள்ளன், தொல்லோர் மருகன்,
..................................
..........................................
வான்தோய் உயர்சிமைத் தோன்றிக் கோவே." ( புறநானூறு. 399 )

என்னும் ஐயூர்முடவனார் பாடலில், சோறாக்கும் பெண்முகந்து தந்த வெண்ணெல்லை, பூணிடப்பட்ட பெரிய உலக்கையால் குற்றி அரிசியாலாக்கிய சோற்றை, நெடிய மாமரத்தின் சுவையான கனியைப் பிசைந்து செய்த நறிய புளிக்குழம்பும், கரிய கோட்டையுடைய சுறாமீனின் இறைச்சி துண்டினையும், வயலில் விளைந்த வள்ளைக் கீரையையும், சிறிய கொடியிற் கிடைத்த பாகற்காயும் இனமாகியவற்றோடு கலந்து இலை மூடும்படியாகச் செய்த முழுத்த சோறும், வைக்கோல்களில் நாள்தோறும் உழைக்கும் களமர் (பள்ளர்) தாமுண்ட கள்ளாற் பிறந்த மயக்கத்தால் மடிந்திருப்பாராயின், விடியலிற் பழஞ்சோற்றை உண்ணும் முழங்குகின்ற நீர்நிலமுடைய தோட்டங்களில், காவிரி பாயும் நாட்டில் ஒருநாளும் கெடாத ஓங்குபுகழையுடைய கிள்ளிவளவனை நினைத்து செல்கின்றோம், அவனையன்றி பிறர்பால் ஒரு காலும் செல்ல மாட்டோம் எனத் தொடரும் இப்பாடலானது,

நெடிய மூங்கிலாகிய தூண்டிலாற் பிடித்த மீனை விற்று, கிணைமகள் சமைத்த, நீர்த்தாய்ப் பரந்த புளித்த கூழை, உண்ணும் காலத்தில் உண்ணுதலை தவிர்த்து உணவை உடையேனாய் நெஞ்சழிந்து நிற்கும் நீ, அறவோர்களிற் சிறந்த அறவோனும், மறவர்களுள் சிறந்த மறவனும், உழவருட் சிறந்த உழவனும்,

பழங்குடியின் வழித்தோன்றலாகிய 'தாமான் தோன்றி கோன்' நின்பால் அன்பு கொண்டுவிட்டான், எனவே, நீ விரும்பும் செல்வத்தைப் பெறுவாயாக என அறிந்தோர் கூறினர். எவரிடமும் செல்லமாட்டேன் செல்லமாட்டேன் எனக்கூறிய புலவர் சோழன் கிள்ளிவளவனின் புகழையறிந்து பாடி நின்றார். புலவரின் புலமையை மதித்துப் போற்றிய வளவனும் புலவர் முடவராதலின் பகடு பூட்டிய வண்டியில் தான் செல்ல இயலும் என்பதனை அறிந்து காளைகளோடு ஊர்ந்து செல்லும் ஊர்தியையும், வானத்தில் விண்மீன்கள் பூத்தாற் போன்ற அழகிய ஆநிரைகள் பலவும் தந்து நின்றான் என்கிறது மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்.

"மல்லல் பேர்ஊர் மடியின், மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்" (பெரும்பாணாற்றுப்படை 254 256)

என்ற பாடலடிகளில், தோப்புக் குடிகளில் வாழ்ந்த மருதநில மக்கள் பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக்கிழங்கு, அரிசிச்சோறு முதலியவற்றை தங்கள் உணவு வழக்காற்றில் பெரும்பாலும் இடம்பெறச் செய்தனர் என்பதனை மேற்கண்ட இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

## நெய்தல் நில மக்களின் அடிசில் வகைகள்

ஒய்மானாட்டு நெய்தல் நிலத்து நுளைச்சியர் அரித்த கள்ளையும் உலர்ந்த குழல்மீனையும் (சூட்டிறைச்சியை) சூடாக உண்டனர் என்பதை பின்வரும் சிறுபாணாற்றுப்படை பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

" கரும்புகைச் செந்தீ மாட்டி, பெருந்தோள்
மதியேக்கறூஉம் மாசுஅறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்
தளைஅவிழ் தெரியல் தகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரோடு
வறற்குழற் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்" (சிறுபாணாற்றுப்படை 156163)

மேலும், தொண்டை நாட்டுப் பட்டினத்தில் அதாவது தொண்டைநாடு என்பது சென்னைக்கு அருகிலுள்ள மாமல்லபுரத்தைக் குறிப்பதாகும். இங்குள்ள கடற்கரைப் பட்டினத்து மக்கள் நெல்லை இடித்து மாவாக்கி அதை ஆண்பன்றிக்கு உணவாகக் கொடுத்து கொழுக்க வைத்து அதனைக் கொன்று இறைச்சி உணவாக சமைத்தனர். இதனை,

"கள்அடு மகளிர் வள்ளம் நுடக்கிய
வார்ந்து உகு சில்நீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சேறு ஆடிய இரும்பல் குட்டிப்
பல்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெல்மா வல்சி தீற்றி பல்நாள்

குழிநிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியோடு கூர்நறாப் பெறுகுவீர்" (பெரும்பாணாற்றுப்படை 339 345)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

*ஆய்வு முடிவுரை*

பண்டைத் தொல்குடிச் சமூகத்தினர் இயற்கையில் கிடைத்த உணவுப் பொருள்களையும், உழுது பயிரிட்டு கிடைத்த நெல்லையுமே தங்கள் வாழ்வின் பெரும்பான்மையான உணவுமுறைகளாகக் கொண்டனர். மேலும், தொல்குடித் தமிழ்ச்சமூகத்தினர் உணவுப் பொருட்களை மண்பாண்டங்களில் சமைத்துள்ளனர் என்பதனை இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது. இத்தகைய உணவுகளை இன்சுவை அடிசில், என்றும் ஊன்துவை அடிசிலென்றும், பால்சோறு, நெய்சோறு, பருப்புச்சோறு என்றும் பல்வேறு பெயர்களால் இலக்கியங்களில் இடம்பெறச் செய்துள்ளனர். ஊன்துவை அடிசிலென்று சொல்லப்படும் இறைச்சி வகைகள் அரசன் முதல் அனைவருமே உண்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட ஒருசில அடிசில் வகைகளை நடைமுறையில் வாழும் மக்களும் புழக்கத்தில் வைத்திருக்கின்றர் என்பது தொல்குடித் தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியல் எச்சங்களாக இன்றும் தமிழா இவ்வாறுதான் வாழ்கிறார்கள் என உறுதியளிப்பதாக அமைந்துள்ளது.

**பா.கனிமொழி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்,
இலாஸ்பேட் புதுச்சேரி 08.

*பார்வை நூல்கள்*

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் மூலமும் உரையும், (அகத்திணையியல், புறத்திணையியல்), சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
2. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ), மணிமேகலை, உ.வே. சா. பதிப்பகம், சென்னை. 1987.
3. சண்முகம்பிள்ளை, மு., (ப.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
4. சேக்கிழார் பெரியபுராணம், மணிவிழா வெளியீடு, காசிமடம், திருப்பனத்தாள்.
5. பரிமளம், மு கு.வெ. பாலசுப்பிரமணியம் (ப.ஆ), பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

# உறவுகளைத் தேடுகிறோம்

உறவுகளை தேடியே உருக்குலைந்து போகிறோம்
உயிரோடு வருவாரென நாளும் பார்க்கிறோம்
ஏறாதபடியெல்லாம ஏறி நாம அலைகிறோம் - மனு
போடாத இடமில்லை மனங்களும் இரங்கவில்லை

போராட்டம் நடத்தினோம உண்ணாமலும் இருந்தோம்
போவோரும் வருவோரும் விசாரணை நடத்துகிறார்
பாலகனாய் இழுத்துச சென்ற பாலகனைக்காண
பரிதவித்தே ஆண்டுகள பயனின்றிக் கழிகிறது

மூப்பின் வேதனையும முன்வந்து உலைக்கிறது
முடிய கதவுகளும பூட்டியே கிடக்கிறது
ஆடிய ஆட்டத்தின ஆட்சியை மாற்றுகிறார்
அடுத்தவரும வந்தும அதையே தொடருகிறார்

உலக நீதிகளும் உளுத்துத் தான் போனதோ
ஒப்பாரி வைக்கின்ற எங்களை நோக்காதோ
தருமத்தின் காவலரே தயை கூர்ந்து கேளுங்கள்
யுத்தம் முடித்தும புத்தம இரங்கவில்லை

காணாமல் போனபிள்ளையை கான்பேனா ஆயுளில்
கதறுகின்றது கேட்கலையோ கருணை உலகுக்கு
நாட்டை கேட்கவில்லை நாதியற்று உறவுகளைதேடுகிறோம்
காணாமல் போனவரை கண்முன்னே காட்டிவிடும்

கீத்தா - பரமானந்தன்